விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 21 வியாழக்கிழமை (03.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 106

SATS TECH
யாழ்.நகரின் முன்னணி
Satellite & Cable TV நிறுவனம்
DIAL 021 222 5908

## மடுவை சமாதான வலயமாக்கக் கோரி 5 ஆயிரம் பேர் திரண்டு அமைதிப் பேரணி

(மன்னார்)

மன்னார் மடுத் தேவாலயம் அருகே நேற்றும் கடும் சமர் நடைபெற்று வரும் நிலையில் மடுத் திருத்தலத்தைச் சமாதான வலயமாகப் பிரகடனப்படுத்தக் கோரி 5 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் பேரணி நடத்தியுள்ளனர்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப் அடிகளார் பேரணிக்குத் தலைமை வகித்தார். மன்னார் புனித செபஸ்ரியார் தேவாலய முன்றலிலிருந்து முற்பகல் 9.45 மணிக்கு இந்தப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டி, பானைகளுடன் வீதியில் இறங்க ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை

(கொழும்பு)

விலைவாசி அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டிருந்த காலக்கெடு முடிபடைந்திருப்பதால் அதற்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுக்க இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

விலைவாசி அதிகரிப்பால் மக்களின் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துள்ளது. இதற்கு ஈடுகொடுக்க (10 ஆம் பக்கம் பார்க்க)

# றக்கீம் உட்பட 3 எம்.பிக்கள் தமது பதவியிலிருந்து விலகினர்

## வில்பத்துப் பகுதியில் தந்தையும் மகனும் சுட்டுக்கொலை

(கொழும்பு)

அநுராதபுரம் வில்பத்து வனவிலங்கு சரணாலயப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அப் பகுதியில் நடமாடிய அடையாளம் தெரியாத ஆயுதக் குழுவொன்றே இவர்களைச் சுட்டுக் கொன்றிருப்பதாக இராணுவப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குத் தேர்தலில் போட்டியிடுவதற்கு!

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூவ் ஹக்கீம், பொதுச் செயலாளர் ஹசன் அலி, தவிசாளர் பசீர் சேகுதாவூத் ஆகிய மூவரும் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளிலிருந்து விலகுவதாக நேற்று பிற்பகல் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து கிழக்கு மாகாண சபைத் தேர்தல் களம் பரபரப்பாகியிருக்கின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அகில இலங்கை ரீதியில் யாழ்.இந்து மாணவர்கள் இருவர் இரண்டாம் இடம்

(யாழ்ப்பாணம்)

2007 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக தமிழ் மொழி மூலம் தோற்றியவர்களுள் யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள் இருவர் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தானிடமிருந்து இலங்கை அரசு அவசர அவசரமாக ஆயுதக் கொள்வனவு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களையடுத்து பாகிஸ்தானிடமிருந்து இலங்கை அவசர அவசரமாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்திய அமைப்பு ஒன்றிடமிருந்து இலங்கை இராணுவம் 150 ஆயிரம் குண்டுகளை சுடக் கூடிய 60 மில்லி மீற்றர் மோட்டார் உபகரணங்களும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தை நம்பிப் பலனேதுமில்லை பதவி விலகல் குறித்து ஹக்கீம் விளக்கம்

(கொழும்பு)

தமிழ்மக்களின் வாக்குகளைக் கொள்ளையடிப்பதற்கு மகிந்த அரசாங்கம் திட்டமிடுகின்றது. அதனைத் தடுத்து நிறுத்துவதற்காகவே நாடாளுமன்றப் பதவியைத் துறந்து கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளேன் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூவ் ஹக்கீம் தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் நேற்று அவர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிடாதது ஏன்?

### உத்தியோகபூர்வ அறிக்கை நேற்று வெளியீடு

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடாமைக்கான காரணத்தை விளக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று உத்தியோக பூர்வமாக அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளது.

இரா.சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராஜா கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், ஜாதிக ஹெல உறுமய,மகா ஜன எக்சத் பெரமுன, ஜனதா விமுக்தி பெரமுன போன்ற கட்சிகளின் ஆதரவுடன் நூலிழையில் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஒரு தீவிர சிங்கள தேசியவாதப் போக்கை கடைப்பிடித்து அரசியல் ரீதியாக, இராணுவ ரீதியாக (02 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மடுப் பகுதியில் உக்கிரமடையும் மோதல்

(மன்னார்)

மன்னார் மடுப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் உக்கிர மோதல் இடம்பெற்று வருவதாக இரு தரப்பினரையும் மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை மன்னார் கல்லியடஞ்சன் பகுதியை மீட்டிருப்பதாக இராணுவத்தரப்பில் கூறப்படுகின்றது. இந்த மோதலில் 14 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டதுடன் 40 பேர் காயமடைந்திருப் (10 ஆம் பக்கம் பார்க்க)

மிதிவெடி விழிப்புணர்வு தினம் : ஏப்ரல் 1 - 14
மிதிவெடி பிரதேசங்கள் என அடையாளம் இடப்பட்ட பகுதிகளை அவதானித்து தவிர்த்து நடப்போம்.
'சர்வோதயம்' 'யுனிசெவ்'

# யாழில் போசாக்கின்மையால் 407 சிறுவர்கள் பாதிப்பு

## ஐ.நா. ஸ்தாபனம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடபகுதிக்குப் போதிய அளவு உணவு விநியோகம், ஊட்டப்பொருட்களின் விநியோகம் இல்லாததால் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாக மனித நேய அமைப்புகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 5 வயதுக்குக் குறைந்த 500க்கும் அதிகமான சிறுவர்கள் போசாக்கின்மையால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை தகவல்கள் கூறுகின்றன.

யாழ்.குடாநாட்டில் 407 சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்படுகின்றமை கண்டறியப்பட்டதாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனங்கள் கூறுகின்றன.

பெப்ரவரி, மார்ச் மாதங்களில் ஓமந்தை சோதனைச் சாவடியூடாக பொதுமக்களுக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கவில்லை என இன்டர் ஏஜன்சி ஸ்டான்டிக் கொமிட்டியின் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சில் உணவுப் பொருட்களின் இருப்பு மிகவும் குறைந்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் சில கிராமங்களில் கோதுமை மாவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரியவருகின்றது.

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் வவுனியாவிலுள்ள களஞ்சியத்திலிருந்து அத்தியாவசிய மருந்துப் பொருள்களை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கவில்லை என கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களம் கூறுகிறது.

அரசாங்கம் குறைந்த மருந்துப் பொருட்களையே தற்பொழுது வைத்துள்ளது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது என இன்டர் ஏஜன்சி ஸ்டான்டிங் கொமிட்டி தெரிவித்துள்ளது.

பருவகாலம் தவறிய மழையால் கிளிநொச்சி மாவட்டத்தில் 4ஆயிரத்து 25 ஏக்கர் பயிர் நிலம் பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்டச் செயலகத் தகவல்கள் கூறுகின்றன.

போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு வழங்குவதற்கான உணவுப் பொருட்களை அனுப்பி வைக்குமாறு கொழும்பிலுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்திருப்பதாக யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

போசாக்கை ஏற்படுத்தும் புனர்வாழ்வுத் திட்டம் போதிய உணவுப் பொருட்கள் இல்லாமையினால் அதனை முன்னெடுப்பதில் சிக்கில் நிலை தோன்றியிருப்பதாகவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது. (அ-5)

# ஆளும்கட்சி உறுப்பினர்கள் வெளிநாடு செல்வதற்கு தடை

(கொழும்பு)

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் நாட்டை விட்டு வெளியேறக் கூடாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணிப்புரை வழங்கியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பதில் நாடாளுமன்றச் செயலாளர் நாயகமாக தம்மிக்க கித்துல் கொட நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்தே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகமாக கடமையாற்றிய பிரியாமணி விஜயசேகர கடந்த திங்கட்கிழமையுடன் ஓய்வு பெற்றமையைத் தொடர்ந்து பதில் செயலாளர் நாயகமாக தம்மிக்க கித்துல் கொடவை அரசாங்கம் நியமித்தது.

இந்த நியமனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்றத்தில் போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் தெரிவித்தன.

எதிர்வரும் 8ஆம் திகதி கூடவிருக்கும் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி தனது எதிர்ப்பை தெரிவிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

இதனைச் சமாளிக்கும் வகையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் எவரும் அடுத்த வாரம் வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடாது என ஜனாதிபதி கடுமையாக பணிப்புரை விடுத்துள்ளார்.

அனைத்து ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்திற்கு சமுகமளிக்க வேண்டும் எனவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

கித்துல் கொடவை பதில் செயலாளர் நாயகமாக பணியாற்றுவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என தெரிவித்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி. அரசியலமைப்பு சபை நியமிக்கப்படாமல் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பதவிக்கு ஒருவரை நியமிப்பது சட்ட விரோதமானது எனக் கூறியுள்ளார். (ச-5)

## நடமாடும் நூலக சேவை

(யாழ்ப்பாணம்)

உலக புத்தக தினத்தை முன்னிட்டு மாணவர்கள் மத்தியில் விழிபுணர்வை ஏற்படுத்தும் நோக்கில் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் கிராம உப அலுவலகம் பொது நூலகம் நடமாடும் நூல்க சேவையினை நடாத்தவுள்ளது.

இதன்படி நாளை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயத்திலும் எதிர்வரும் 7ஆம் திகதி ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலையிலும் மறுநாள் ஆனைக்கோட்டை புனித அன்னம்மாள் வித்தியாலயத்திலும் நடமாடும் நூலக சேவை மேற்கொள்ளப்படவுள்ளது.

உள்ளூராட்சித் திணைக்கள வடமாகாண சுற்றறிக்கைக்கு அமைவாக இந்நடமாடும் நூலகசேவை நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

# கிழக்கு மாகாணசபைத் தேர்தலில்...

அல்லது மனிதாபிமான ரீதியாக எடுத்த ஒவ்வொரு முடிபிலும் தீவிர சிங்கள தேசிய வாதத்தை கட்டியெழுப்புவதை நோக்கமாகக்

கொண்டே செயற்பட்டு வருகின்றார். அதன் மூலம் அவர் தன்னை தீவிர சிங் கள தேசியத் தலைவராக அடையாளம் காட்டி வந்தி ருக்கின்றார்.

18 மாதங்களரக கலந்து ஆலோசனை செய்யப்பட்டதன் பின்பு 19 வருடங்களுக்கு மேலாக இலங்கை அரசியல் சாசனத்தில் இருந்துவந்த விதிகளையே நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற பிரேரணை தேசியப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வை காண வேண்டுமென்று எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் முயற்சிகள் ஒரு போலித்தனமான பாசாங்கு என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

தற்பொழுது நடைமுறைக்கு வருவதற்கு பிரேரிக்கப்பட்டிருப்பது, தற்பொழுது இருக்கும் விதிகளுக்கு குறைவானதே. ஆரம்பத்திலிருந்த இணைந்த வடக்கு கிழக்கிற்குப் பதிலாக தற்பொழுது பிரிக்கப்பட்ட வடக்கு -கிழக்கு, பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்கள் மறுக்கப்பட்டு நீதிமன்ற தீர்மானங்களின் மூலமாக பெருமளவில் தரங்குறைக்கப்பட்ட ஏனைய விதிகள்.

### வடக்கு - கிழக்குப் பிரிப்பு

மிகவும் பெரும்பான்மையாகத் தமிழ் மொழி வாரியானதும் தொடர்ச்சியானதுமான வடக்கு - கிழக்கு மாகாணங்கள் 1987ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்திய -இலங்கை சர்வதேச ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒன்றாக இணைக்கப்பட்டன.

இணைக்கப்பட்ட இப்பிரதேசம் 18 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து நிலைபெற்று அடுத்தடுத்து வந்த 4 ஜனாதிபதிகளால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

18 வருடங்களுக்கு பின்பு இணைப்பை ஏற்படுத்திய நடைமுறையில் ஒரு தவறு இருப்பதாக அடிப்படை மீறல் வழக்கு ஒன்றின் மூலம் ஜே.வி.பியினால் நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றைப் பெற முடிந்தது.

சரித்திர ரீதியாக கிழக்கில் வாழ்ந்து வந்த தமிழ்க் குடிமக்கள் வழக்கில் தலையிட்டு தங்கள் நியாயத்தை முழுமையாகவும் நற்பயன்பெறக் கூடியவகையிலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

தன்னுடைய முன்னோடிகளான 4 ஜனாதிபதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இணைப்பில் இருப்பதாக் கூறப்பட்ட நடைமுறைத் தவறைத் திருத்தி சர்வதேச ஒப்பந்தத்தை கடைப்பிடிப்பதற்கு தேவையான சட்டத்திருத்தத்தை கொண்டுவந்தால் அதை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு தயார் நிலையில் உள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

சமாதான முயற்சிகளைத் தொடர்வதற்கு நடைமுறையில் இருக்கும் இணைந்த வடக்கு கிழக்கு பிரதேச ஒழுங்கு ஓர் அத்திபாரக் கல்லாக அமையும் என்றும் அது எவ்விதத்திலும் குழப்பப்படக் கூடாதென்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு சர்வதேச சமூகத்தால் வலியுறுத்திக் கூறப்பட்டது.

இருப்பினும் ஜனாதிபதி அவர்கள் தீவிர சிங்கள தேசியவாத போக்கை கடைப்பிடித்து தன்னை தீவிர சிங்களத் தேசியத் தலைவராக அடையாளம் காட்டிக் கொண்டார். அதன் மூலமாக இந்திய -இலங்கை சர்வதேச ஒப்பந்தத்தின் மூலம் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த தமிழ் பேசும் மக்களுக்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் மறுக்கப்பட்டன.

### தமிழ்ப் பிரதேசங்கள் மீது தாக்குதல்கள்

பெரும்பான்மையான தமிழ் மொழி வாரியானதும், தொடர்ச்சியானதுமான வடக்கு -கிழக்குப் பிரதேசத்தில் தமிழ்க் குடிமக்கள் வாழும் கிராமங்கள் மீது மிகக் கடுமையான விமானத் தாக்குதல்கள், கண்மூடித்தனமான பல்குழல் எறிகணை வீச்சுக்கள் உட்பட தீவிரமான இராணுவத் தாக்குதல்களை மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஆரம்பித்தது.

குறிப்பிட்ட இராணுவத் தாக்குதல்கள் எல்.ரி.ரி.ஈ யினரின் இனம் காணப்பட்ட இலக்குகள் மீதானவை எனக் கூறப்பட்ட பொழுதும் பலியானவர்கள் மிகக் கூடுதலாக தமிழ்ப் பொதுமக்களும், சில சமயங்களில் முஸ்லிம் மக்களும் ஆவர்.

பல நூற்றுக்கணக்கான குடிமக்கள் கொல்லப்பட்டார்கள். பல நூற்றுக்கணக்கானவர்கள் அங்கவீனப்பட்டும், படுகாயமடைந்தும் உள்ளார்கள். குடிமக்களின் சொத்துக்கள், வீடுகள், தோட்டங்கள், பயிர்கள், கால்நடைகள், விவசாயம், கடற்றொழில் உபகரணங்கள் அழிக்கப்பட்டன.

ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் குடிபெயர்ந்து, வாழ்வாதாரங்களை இழந்து அநாதைகளாகவும், அகதிகளாகவும் ஆக்கப்பட்டனர். வணக்க ஸ்தலங்கள், பாடசாலைகள் போன்ற பொதுக் கட்டடங்களும் அழிக்கப்பட்டன.

அதேவேளை இலங்கை அரசுப் படைகளினாலும், அரசுப் படைகளுடன் இணைந்து செயற்படும் துணை இராணுவக் குழுக்களினாலும்,விசேடமாக வடக்கு - கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிக்ளிலும் தமிழ் மக்கள் சட்டத்திற்கு விரோதமான கொலைகளுக்கும், பலவந்தமான ஆட்கடத்தல்களுக்கும் தொடர்ச்சியாக உட்படுத்தப்பட்டு வருகின்றார்கள். இச்செயல்களின் நோக்கம் தமிழ் மக்களைப் பயமுறுத்தி அவர்களை நாட்டை விட்டு வெளியேறச் செய்வதாகும்.

மகிந்த ராஜபக்ஷ அவர்களுடைய அரசின் கடும் இராணுவத் தாக்குதல்கள் தொடர்ந்தும் நடைபெறுகின்றன. இவ்வரசின் இறுதி இலக்கு தமிழ் மக்களை இராணுவ ரீதியாக அடிபணிய வைத்து அடக்கி ஆட்சி புரிவதேயாகும்.

ஏற்றுக் கொள்ளக் கூடிய ஓர் அரசியல் தீர்வை உருவாக்குவதற்கு விருப்பமற்ற, வல்லமையற்ற ராஜபக்ஷ அரசு ஒரு பெறுமதியற்ற அரசியல் ஒழுங்கை வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் மீது திணிப்பதற்கு முயற்சிக்கின்றது.

### திட்டமிட்ட தேர்தல் சதி

பிரிக்கப்பட்ட கிழக்கில், அவசரம் அவசரமாக நடத்தவிருக்கும் இத் தேர்தல் ஒரு திட்டமிட்ட கொடூரமான சதி நடவடிக்கையாகும்.

தமிழ் மக்கள் மீது நிறைவேற்றப்படும் பாதகமான செயல்களை மறைப்பதற்கு ஒரு புகை மண்டலமாக, தன்னுடைய தீய நோக்கங்களை அடைவதற்காக ராஜபக்ஷ அரசு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் என்ற ஆயுதத் தமிழ்த் துணைக்குழுவுடன் இணைந்து செயற்படுகின்றது.

உள்ளக சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தாங்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசத்தில், போதிய சுயாட்சி என்ற தமிழ் பேசும் மக்களின் நியாய பூர்வமான அரசியல் அபிலாஷைகளைத் தடை செய்வதே ராஜபக்ஷ அரசின் திடமான நோக்கம்.

மேலும் இப்பாதையில் இடம்பெற்றிருக்கும் முன்னேற்றங்களைப் பின்நோக்கித் தள்ளுவதும் ராஜபக்ஷ அரசின் நோக்கமாகும். அபிவிருத்தி என்ற போர்வையில் வடக்கு - கிழக்குப் பிராந்தியத்தின் கிழக்குப் பகுதியில் குறிப்பிட்ட பிரதேசங்களை உயர்- பாதுகாப்பு வலயங்களாகவும் தொழில் வளர்ச்சி வலயங்களாகவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு வலயங்களாகவும், பிரகடனம் செய்து கிழக்குப் பகுதியைச் சிங்கள மயமாக்குவதே ராஜபக்ஷ அரசின் நோக்கமாகும்.

கிழக்குப் பகுதியைச் சிங்கள மயமாக்கும் நோக்கத்துடன் அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான நிதி உதவியினைத் திரட்டுவதற்காக அரசுக்கு ஒரு தமிழ்க் 'கையாள் தேவைப்படுகின்றது.

### ஜனாதிபதி -ரி.எம்.வி.பி கூட்டுறவு

ராஜபக்ஷ அரசினுடைய தயவில் தங்கியிருக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ராஜபக்ஷ அவர்களின் கட்டளைகளை நிறைவேற்றத் தயாராக உள்ளனர்.

ராஜபக்ஷ அரசாங்கம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளைப் பயன்படுத்தி அவர்கள் தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கும் வற்புறுத்தல், பலவந்தம் மூலமாக தமிழ் மக்களை கட்டாயப்படுத்தி வாக்களிக்கச் செய்து அதன் மூலம் பெறப்படும் ஆதரவை தமிழ் மக்கள் தனது அரசின் கொள்கைகளுக்கு வழங்கிய ஆதரவாகக் காட்டுவதற்கு முற்படுகின்றது.

மிகவும் கொடூரமான இராணுவத் தாக்குதல்கள் மூலம் மோசமாகப் பாதிக்கப்படும், தொடர்ந்தும் இராணுவ மயமாக்கப்பட்ட சூழலில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பலவந்தமான கோரிக்கைகளுக்கு அடிபணிந்து செயற்படுவார்கள் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் ஆயுத பலம் பெற்ற அரச துணை ஆயுதக்குழு. தமது பலவந்தமான கோரிக்கைகளை மீறும் தமிழ் பேசும் மக்களைத் தேர்தலுக்குப் பின் தண்டிப்பதற்கு, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அரசு அனுமதி பெற்றவர்களாகக் கருதப்படுகின்றார்கள்.

சட்ட ஒழுங்குக்குப் பொறுப்பான அரச கட்டமைப்பு, தமிழ் மக்கள், விடுதலைப் புலிகளின் அடுத்தடுத்து இடம் பெற்ற சட்டமீறல்கள் சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை ஒருபோதும் எடுக்கவில்லை.

இதைத் தமிழ் மக்களும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளும்நன்குஅறிவார்கள்.

கடந்த 2 வருடங்களுக்குள் இந்த அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அளவற்ற தீங்குகளும், சேதங்களும், நாடு சுதந்திரமடைந்த பின் ஆட்சியிலிருந்த எந்த அரசாங்கத்தாலும் செய்யப்படவில்லை.

அவர்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசத்தில் அவர்களைக் குழி தோண்டிப் புதைப்பதற்காக, அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டுள்ள பயங்கரமான பொறிக்குள் தமிழ் பேசும் மக்கள் அகப்படக் கூடாது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளினதும் அரச ஆயுதப் படைகளினதும் வெளிப்படையான அல்லது வெளிப்படையற்ற ஆயுத பலம் ஏனைய பலவந்தமான பலங்களின் ஊடாக இத்தேர்தல் மூலம் தனது கபடமான அரசியல் நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவேற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் எத்தனிக்கின்றார்.

மிகவும் கவனமான ஆலோசனைகளின் பின்பு. எமது அடிப்படை அரசியல் கொள்கைகளைப் பாதகமான முறையில் விட்டுக் கொடுப்பதையோ அல்லது அடிப்படைக் கொள்கைகளுக்கு முற்று முழுதாக எதிராக நடத்தப்படும் தேர்தலில் பங்கெடுப்பதையோ. கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த அடிப்படைக் கொள்கைகளுக்கு மாறாகவே நாம் செயற்பட முடியாது என்பதால் கிழக்குத் தேர்தலில் நாம் போட்டியிடுவதில்லை என்ற தீர்மானத்தை எடுத்திருக்கின்றோம் என்றுள்ளது. (ச-5)


## பதவி வெற்றிடங்கள் - 2008

பின்வரும் பதவிகளுக்கு மேலதிகமாக ஆட்களைச் சேர்க்கும் வகையில் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. விண்ணப்பிப்போர்;

- 20-45 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- யாழ்.நகர மையத்திலிருந்து 7 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்களாக இருத்தல் கட்டாயமானதாகும்.

○ தமிழில் ரைப்பிங் செய்து கணனி பக்க அமைப்பாளர்கள்.
(ஆண்கள், பெண்கள்)
(நேர்முகத் தேர்வு 03.04.2008 பிற்பகல் 2.30 மணி)

○ ஒப்புநோக்குநர்கள்
(இருபாலாரும், ஆண்கள் இரவுக் கடமை)

○ அலுவலகச் செய்தியாளர்
(ஆண்கள்)
(நேர்முகத் தேர்வு 03.04.2008 பிற்பகல் 2.30 மணி)

○ பிரதேச செய்தியாளர்கள்
வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம்
(நேர்முகத் தேர்வு 04.04.2008 பிற்பகல் 2.30 மணி)

○ ஓவ்செற் இயந்திர இயக்குநர்கள், பயிலுநர்கள்
(ஆண்கள்)
(நேர்முகத் தேர்வு 05.04.2008 பிற்பகல் 2.30 மணி)

○ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

○ சிற்றூழியர்கள்
(நேர்முகத் தேர்வு 06.04.2008 பிற்பகல் 2.30 மணி)

தகுதியுடையவர்கள் குறித்த திகதிகளில் நேரில் வரவும்.

இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி

# இன்று ஒரு தகவல்

## தேடுங்கள் கிடைக்கும்!

ஓர் இளைஞன் சாலை ஓரமாக அழுதுகொண்டு உட்கார்ந்திருந்தான். அந்த நேரத்தில் பிச்சைக்காரனொருவன் அந்தப் பக்கமாக வந்தான். "ஏன் அழுதுகொண்டிருக்கிறாய்?" என்று விசாரித்தான். "என்னிடம் ஒன்றுமே இல்லை... இந்த உலகத்திலே நான் இருந்து என்ன பிரயோசனம்? அதனாலேதான் அழுகிறேன்" என்றான். உன்னிடம் புதையல் ஒன்று மறைந்திருக்கிறது. மறைந்திருக்கிற புதையல் என் கண்ணுக்குத் தெரிகிறது. அதை விற்க நீ தயாரா? என்று கேட்டான் பிச்சைக்காரன். இளைஞனுக்கு ஆச்சரியம்! "என்னிடம் ஒரு காசுகூட இல்லையே!... அப்படி இருக்கும்போது புதையல் எங்கிருந்து வந்தது?" என்று கேட்டான். பிச்சைக்காரன் சிரித்தான். "இப்படித்தான் எல்லாரும் சொல்கிறார்கள். நீ என்னுடன்வா. நம் நாட்டு அரசரிடம் போவோம். உன்னிடமுள்ள புதையலை அவர் நல்ல விலைக்கு வாங்கிக்கொள்வார்" என்றான். "அது உனக்கு எப்படித்தெரியும்?" என்று இளைஞன் கேட்டான். இதற்கு முன்னரும் இது மாதிரிப் பலரை அரசரிடம் அழைத்துச் சென்றிருக்கிறேன். அதனால்தான் உன்னையும் கூப்பிடுகிறேன்.

"நம்மிடம் என்ன புதையல் இருக்கிறது? இவனே பிச்சை எடுத்துச் சாப்பிடுகிறான். இவன் என்னை அரசரிடம் வா என்று கூப்பிடுகிறானே..." –இளைஞன் சிந்தித்தான். "சரி... இங்கேயே உட்கார்ந்திருப்பதைவிட அங்கே யாவது போய்ப் பார்ப்போமே?" என அவன் பிச்சைக்காரனோடு புறப்பட்டான். வழியிலே அந்தப் பிச்சைக்காரன் "அரசரிடம் போவதற்கு முன்னால் சில விஷயங்களை சரியாக, தெளிவாக முடிவெடுத்துக் கொள்ள வேண்டும். அங்கே போனபின் அது முடியாது இது முடியாது என சண்டை போடக்கூடாது. ராஜாவுக்கு விலையைப் பற்றிக் கவலை இல்லை. என்னவிலை சொன்னாலும் பணம் கிடைக்கும். ஆனால் அதன்பின் விற்பதற்கு நான் தயாரில்லை என்று சொல்லக் கூடாது. அதனால் புதையலை விற்பதா இல்லையா என்பதை இங்கேயே முடிவு செய்துகொள்ள வேண்டும்.

இளைஞனுக்கு ஒன்றுமே புரியவில்லை. என்னிடமா? புதையலா என்று குழம்பினான். அப்பொழுது பிச்சைக்காரன் சொன்னான். "இப்பொழுது உதாரணத்துக்கு உன் கண்களை எடுத்துக்கொள் அதற்கு அரசரிடமிருந்து 50 ஆயிரம் ரூபா வாங்கித்தர முடியும்? இருதயத்தைக் கொடுக்கிறாயா? 20 இலட்சம் வாங்கித் தருகிறேன். மூளையைக் கொடுக்கிறாயா 30 இலட்சம் வாங்கித் தருகிறேன்..." பிச்சைக்காரன் பேசிக்கொண்டே போனான். இளைஞனுக்குகோபம் வந்துவிட்டது. "என்ன உளறுகிறாய்? உனக்கு பைத்தியமா? கண்ணை, இருதயத்தை, மூளையை யாராவது விற்பார்களா? என்ன விலை கொடுத்தாலும் நான் இவற்றை விற்கமாட்டேன். நான் மாத்திரமல்ல யாருமே விற்க மாட்டார்கள்.

பிச்சைக்காரன் வாய்விட்டுச் சிரித்தான். "இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான பெறுமதியுள்ள பொருட்களை உன்னிடம் வைத்துக்கொண்டு விற்க முடியாது என்று சொல்கிற நீதான் ஏழை. என்னிடம் ஒன்றுமே இல்லை என்று வாய்விட்டழுது கொண்டிருந்தாயே... நீதான் பைத்தியக்காரன்" என்றான் பிச்சைக்காரன்.

இன்று பலர் தம்மிடம் புதைந்திருக்கிற ஆற்றலைப் புரிந்து கொள்ள முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை விளக்கப் பெரியவர்கள் சொல்லும் கதை இது. நம்மிடமுள்ள புதையலை நாம் தான் தோண்டி எடுக்கவேண்டும். உண்மையான புதையல் உள்ளே இருக்கிறது. ஆனால் அதை வெளியே தேடுகிறவர்கள் தொகைதான் அதிகம். நம்மிடம் விலைமதிக்க முடியாத பகுத்தறிவு இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு வாழ்க்கையில் முன்னேற முயற்சிக்க வேண்டும். முயற்சி செய்தால் முடியாத காரியம் எதுவுமில்லை.

ஒரு ரயில்வே ஸ்டேசன் பக்கம் வெளியே ஒரு டாக்சி நின்று கொண்டிருந்தது. அந்தப் பக்கமாக வந்த ஒருவர் டாக்சி டிரைவரைப்பார்த்து ஐயா! உங்கள் வண்டியின் பின் சீட்டிலே ஒரு பணப்பை கிடக்கிறது. யாரோ மறந்து போய்விட்டுப் போய்விட்டார்கள் போல இருக்கிறது என்று சொன்னார்.

அதற்கு டாக்சி டிரைவர் "நான்தான் அதைப் போட்டு வைத்திருக்கிறேன். அதற்குள் ஒன்றுமே இல்லை. வெறும் பாஸ்தான்" என்றான். ஏன் என்று கேட்டார் அவர். டிரைவர் சொன்னார் அதைப்பார்க்கிறவர்கள் யாராவது அதை எடுத்துக்கொள்ளலாம் என நினைத்து சவாரிக்கு வருவார்கள் அல்லவா? அதனாலே தான் இப்படிப்போட்டு வைத்திருக்கிறேன்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# இளைஞர் விவகார அமைச்சர்களின் மாநாடு 27ஆம் திகதி கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறுகின்ற பொது நலவாய நாடுகளின் இளைஞர் விவகாரங்களுக்கான அமைச்சர்களின் 7 ஆவது மாநாடு கொழும்பில் நடத்தப்படவிருக்கின்றது. இந்த மாநாட்டில் 53 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர் என்று இளைஞர் விவகாரங்களுக்கான அமைச்சர் பவித்திரா வனனியாராச்சி தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்கசர்வதேசமாநாட்டு மண்டபத்தில் இம்மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆரம்ப வைபவத்திலும் தொடர்ச்சியாக 30ஆம் திகதிவரை 'சினமன் கார்டன்' ஹோட்டலில் நடைபெற விருக்கின்ற மாநாட்டிலும் சுமார் 300க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்கவிருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக் களத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், இளைஞர்களிடம் சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்ற தொனிப்பொருளில் எதிர் வரும் 27ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடைபெறும் மாநாட்டை நடத்துவதற்கு 35 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறுகின்ற இந்த மாநாடு 7ஆவது மாநாட்டிற்கு பின்னர் நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடத்துவதற்கு தீர்மானிக்கப்படும்.

பயங்கரவாத செயற்பாடுகள் அதிகரித்துள்ள இந்நிலையில் இவ்வாறான மாநாட்டை இலங்கையில் நடத்துவதையிட்டு அரசாங்கம் பெருமைப்படுவதுடன் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகின்ற ஆரம்ப வைபவத்திற்கு பிரதம அதிதியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்வார் எனத் தெரிவித்தார். (அ-5)

# தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு திருமணம் செய்ய விடுதலைப் புலிகள் தடை

## பாதுகாப்புப்படை தளபதி குற்றச்சாட்டு

தோல்வியின் எல்லையில் நிற்கும் புலிகள் அமைப்பு தமது ஆட்பலத்தை இழந்து பெரும் நெருக்கடிநிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதனை நிவர்த்தி செய்யவும் இயக்கத்தின்உறுப்பினர்எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்காகவும் பல்வேறு உபாயங்களை புலிகள் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த காலங்களில் பலவந்தப் படுத்தியும் கடத்திச்சென்றும் இயக்கத்திற்கு உறுப்பினர்களை இணைத்துக்கொண்ட புலிகள் தற்போது ஒரு படி மேலே சென்று திருமணமாகி குடும்ப வாழ்வில் ஈடுபட்டுள்ள ஆண் பெண்களை பலவந்தமாக கடத்திச் செல்லஆரம்பித்துள்ளதுடன் பச்சிளம் குழந்தைகளைக் கொண்ட பாலூட்டும் தாய்மாரையும் இவ்வாறு பலவந்தப் படுத்தி அழைத்துச் செல்லுமளவுக்கு தரம் குறைந்துள்ளனர் என்று இராணுவத்தினர் விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டியுள்ளனர். இது தொடர்பில் பலாலி பாதுகாப்பு தலைமையகம் விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவித்துள்ள தாவது,

இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டு மன்னார் போர்க் களத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது பாதுகாப்புப் படையினரின் தாக்குதலில் இருந்தும் தப்பிச் செல்ல முற்பட்ட போது அவர்களால் விட்டுச் செல்லப்பட்ட தாய்க்கும் தன் குழந்தைக்கும் உரிய உடைகள், முன்பள்ளி புத்தகங்கள், பொம்மைகள் உட்பட மேலும் பல பொருட்கள்பதுங்குழியில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. இதன் மூலம் புலிகள் இயக்கத்தில் பெரும் ஆட்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமையையும் அவர்களின் மிலேச்சனத்தையும் அறியக்கூடியதாக இருக்கிறது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் 30 வயதுக்கு கீழ்ப்பட்ட இருபாலாரும் திருமணம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. அவர்கள் திருமணம் செய்வதற்கான வயதெல்லை 30 வயதுக்கும் மேலானதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. திருமணம் செய்யக்கூடிய சிறந்த வயதாக 20க்கும் 30க்கும் இடைப் பட்ட வயது சிறந்ததென கருதப்பட்டாலும் அந்த உரிமை அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது. புலிகளின் ஆட்பலம் எந்தளவு குன்றியுள்ளது என்பதை மேற்படி செயற்பாடுகள் பலப்படுத்துகின்றன.

மேலும் அங்கு வாழும் ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் ஒருவர் கட்டாயம் இயக்கத்தில் இணைய வேண்டும் என்பதுடன் 5 பிள்ளைகளுக்கு மேற்பட்ட குடும்பம் ஒன்றிலிருந்து இருவரை கட்டாயம் இயக்கத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

இவ்வாறு பலவந்தமாக இணைத்துக்கொள்ளப்படுகின்ற இளைஞர் யுவதிகளுக்கும் கல்வி பயிலும் இளம் பராயத்தினருக்கும் புலிகள் வழங்கும் உறுதி மொழியானது மரண சான்றிதழாகும்.

உலகில் வேறெந்த நாட்டிலும் இவ்வாறு மனித உரிமைகளை மீறும், மனிதச் சுதந்திரத்தைத் தடுக் கும் வேறு இயக்கமொன்றைக் காண் பது அரிது. அப்பாவித் தமிழர்களை கேடயங்களாக பாவித்து அவர்களை இன்னல்களுக் குற்படுத்தி வருவதுடன் அவர்களுக்கு அரசாங்கம் அனுப்பும் உணவுப் பொருட்களையும் நிவாரணப் பொருள்களையும் கொள்ளையிடுவதில் முதலிடம் வகிக்கின்ற புலிகள் தமிழர்களின் மனித உரிமைகளை மீறமாட்டார்களா? முன் பள்ளி செல்லும் வயதுடைய சிறார்களை அவர்களின் தாயாருடன் போர் முனைக்கு அனுப்புவதன் மூலம் அவர்களின் மனித உரிமைகளையன்றி பட்டினியால் வாடும் குழந்தைக்கு பாலூட்ட வேனும் சந்தர்ப்பம் அளிப்பார்கள் என்பது கேள்விக்குறியே 30 வயதுக்குட்பட்டவர்களுக்கு திருமணத்தடை, திருமணமான ஆண் பெண்கள் உட்பட குடும்பத்தில் ஒருவர் என்றும் 5 குழ்ந்தைகளைக் கொண்ட குடும்பத்தில் இருவர் என்று இயக்கத்தில் இணைத்துக் கொள்வதன் மூலம் அவர்களின் மனித உரிமைபாதுகாக்கப்படுகிறதா? புலிகளின் மனித உரிமை மீறல்களை சர்வதேசமே கண்டித்து வருகிறது. தமிழ்மக்களின் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறும் புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு அப்பாவி தமிழர் களுக்கு வழங்கும் விடுதலை இது தானா என்று அச் செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## இராசிபலன்

03.04.2008
(பங்குனி 21, வியாழக்கிழமை)
துவாதசி பிற்பகல் 2.09 மணிவரை
சதயம் பின்னிரவு12.47 மணி வரை
இராகுகாலம் 01.40-03.10 மணிவரை
சுபநேரம்-07.40-09.10 மணிவரை
பிரதோஷ விரதம்
பரமகுருசுவாமிகள் குருபூசை,
கீரிமலை நகுலேசுவராலய தேவி கொடி

| | |
|---|---|
| மேடம் | காரியசித்தி, பெரியோர் உதவி, நல்ல வருவாய், போசனசுகம். |
| இடபம் | அதிகாரம், நல்லசெய்தி, எடுத்த காரியம் கைகூடும். |
| மிதுனம் | புதிய திட்டமிடல், தந்தைவழி உறவு, அதிகசெலவு, சரீரப்பிரயாசை. |
| கடகம் | எதிர்பாராத அச்சம், முயற்சி தடங்கல், போசனநன்மை. |
| சிங்கம் | சென்றஇடத்தில் செல்வாக்கு, சுப செய்தி, களஸ்திர நன்மை. |
| கன்னி | பகைவரால் நன்மை, செய் தொழில் விருத்தி, தேகநலன். |
| துலாம் | குடும்பக்கவலை, மனச்சஞ்சலம், காரிய தாமதம், பணவிரயம். |
| விருச்சிகம் | சுபசெலவு, மனச்சஞ்சலம், கல்வியில் ஆர்வம், நண்பர்கள் சந்திப்பு. |
| தனுசு | காரிய அனுகூலம், சகோதரர் உதவி, நல்ல செய்தி, நல்லவருவாய். |
| மகரம் | பணவிரயம், விவாதம், வேலைச் சுமை, முயற்சிதாமதம். |
| கும்பம் | தொழில் சிந்தை, விருந்துபசாரம், பெரியோர் சந்திப்பு, உடல்நலம். |
| மீனம் | மனச்சஞ்சலம், நித்திரைக் குறைவு, காரியதாமதம், நண்பர்கள் சந்திப்பு. |

வளவன்

# இலங்கைத் தமிழர் ஆதரவுக் கூட்டம் புதுச்சேரியில் நடத்தத் தடை

(சென்னை)

இலங்கை தமிழர்களுக்கு ஆதரவான கூட்டத்தைப் புதுச்சேரியில் நடத்துவதற்கு, சென்னை உயர் நீதிமன்றம் தடைவிதித்து உத்தரவிட்டுள்ளது.

பெரியார் திராவிடர் கழகம் சார்பில் புதுச்சேரி அரியாங்குப்பத்தில் இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக 27-11-2007 இல் பொதுக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கு அரியாங்குப்பம் பொலிஸார் அனுமதி தர மறுத்தனர்.

இது தொடர்பாக திராவிடர் கழகம் சார்பில், உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. குறிப்பிட்ட நிபந்தனைகளுடன், பரிசீலனை செய்யும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதை எதிர்த்து அரியாங்குப்பம் பொலிஸார் எதிர் மனு தாக்கல் செய்தனர். தலைமை நீதிபதி ஏ.பி.ஷா. நீதிபதி பிரபா ஸ்ரீதேவன் ஆகியோர் முன்னிலையில் இம்மனு கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. ஏப்ரல் 23ஆம் திகதி எழுத்து பூர்வமான பதில் மனுவைத் தாக்கல் செய்ய பெரியார் திராவிடர் கழகத்துக்கு உத்தரவிட்டனர். அது வரை கூட்டம் நடத்ததடைவிதித்தனர். (அ-5)

# சாவகச்சேரி, மல்லாகம் மாவட்ட நீதிமன்ற கட்டடத்துக்கு உலகவங்கி உதவ வேண்டும்

## யாழ்.மாவட்ட நீதிபதி விக்னராஜா விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)


சாவகச்சேரி, மல்லாகம் மாவட்ட நீதி மன்றங்களின் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கு உலக வங்கி உதவிகளை வழங்க வேண்டுமென யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா கேட்டுள்ளார்.

யாழிற்கு வருகை தந்துள்ள உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் நாஹோ இஸி அம்மையார் உள்ளிட்ட உலக வங்கிப் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் யாழ். மாவட்ட நீதிமன்றில் சந்தித்தபோதே யாழ். மாவட்ட நீதி பதி இ.த.விக்னராஜா இவ்வாறு கேட்டுள்ளார்.

குறித்த உலகவங்கிப் பிரதிநிதிகள் யாழ். நீதிமன்ற கட்டடத்தொகுதியை பார்வையிட்டனர்.

இதன்பின்னர் யாழ்.மாவட்ட நிலைமைகள் தொடர்பாகவும் உலகவங்கியின் உதவிகள் குறித்தும் யாழ்.மாவட்ட நீதிபதியிடம் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் கேட்ட போதே இவ்வாறு கேட்டுள்ளார்.

இதேவேளை யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கான நிதியை உலக வங்கி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)



உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற வித்தியாலய அதிபர் மு.விக்னேஸ்வரனின் தரம் நான்குக்கான "தமிழ் மொழிக்கற்றல்" செயல்நூல் வெளியீட்டுவிழா நிகழ்வில் பிரதி அதிபர் திருமதி.ப.தியாக லிங்கத்திடமிருந்து பகுதித்தலைவர் திருமதி க.கலாமோகன் சிறப்புப் பிரதியைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

# வித்தியா சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பும், ஸ்தாபகர் தினமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வித்தியா சஞ்சிகை வெளியீடும், பரிசளிப் பும், ஸ்தாபகர் தினமும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், சிறப்பு விருந்தினராக ஊரெழு கணேசா வித்தியாசாலை ஓய்வுபெற்ற அதிபர் க.குலசிங்கம், கௌரவ விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.சித்திர வடிவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து ஸ்தாபகர் தினப் பேருரையை திருநெல்வேலி விவசாய போதனாசிரியர் ம.யோகநாதனும், வித்தியாசஞ்சிகை ஆய்வுரையை யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசனும்,

யாழ்.செய்திகள்

பதிலுரையை இதழாசிரியர் க.உருத்திர குமாரனும் வழங்குவர். அத்துடன் முதற் பிரதியை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தயாலய பழைய மாணவியும், உரும்பிராய் இந்துக் கல்லூரி பகுதித்தலைவருமான திருமதி கல்யாணி கலாமோகன் பெற்றுக்கொள்வார். தொடர்ந்து ஆசிரியை திருமதி சு.தவனேசனின் நெறியாழ்கையில் குழு நடனமும், திருமதி ஜெ.முருகதாஸின் நெறியாழ்கையில் நடனமும் இடம் பெறவுள்ளது.

# ஆன்மீகச் சொற்பொழிவு

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் எதிர்வரும் 06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிப் பூசை நிறைவுற்றதும் பிரபல சொற்பொழிவாளர் 'சொல்வேந்தர்' பொன். சுகந்தனின் 'இதிஹாசங்கள்' எனும் தலைப்பில் சொற்பொழிவு இடம் பெறும்.

இதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெற்று அதன் பிற்பாடு அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும். (ஓ)

# அழகியல் கல்வி பாட மதிப்பீடுகள்

(அல்வாய்)

பாடசாலை மட்ட கணிப்பீட்டில் தரம் 11க்கான 2ஆம் தவணை அழகியல் கல்விப் பாட மதிப்பீடுகள் 2008 மேற்கொள்வதன் பொருட்டு வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் தரம் 11இல் பரதநடனம், கர்நாடக சங்கீதம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களைக் கற்கும் மாணவர் களின் விபரங்கள் அவசரமாகத் தேவைப்படுவதால், 2008 க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு முதல் தடவையாக தோற்றவுள்ள மாணவர்களது விபரத்தை உரிய படிவங்களில் பூர்த்திசெய்து மறுதபாலில் அனுப்பி வைக்குமாறு வடமராட்சி கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (ஓ-19)

# மகா கும்பாபிஷேகம்

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மகா கும்பாபிஷேகம் 7ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு உதய காலப்பூசையுடன் ஆரம்பமாகி பகல் 11.30 மணிக்கு கோபுர கலச அபிஷேகமும் , 12 மணிக்கு கும்ப ஆராதனையும் 12.07 மணிக்கு ஏககால கலச மகாகும்பாபி ஷேகமும் நடைபெற்று பிற்பகல் 1 மணிக்கு சுவாமி வீதியுலா வந்தருள்வார்.

தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று 41ஆம் நாள் மே மாதம் 17ஆம் திகதி சனிக்கிழமை சகஸ்ர மகா சங்காபிஷே கமும், விசேட உற்சவமும் இடம்பெறும்.

# உத்தியோகத்தர் இடமாற்றம்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயக்கல்வி அலுவலக நிர்வாக உத்தியோகத்தராக , பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.விக்னேஸ்வரமூர்த்தி வடக்கு மாகாண சபையால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தராக அண்மையில் பதவி உயர்வு பெற்ற பிரதேச செயலகத்தின் பிரதம முகாமைத்துவ உதவியாளர் கே.முருகையா பொறுப்பேற்றுள்ளார். (அ-52)

# மெய்வல்லுநர் போட்டி

(அல்வாய்)

வடமராட்சி சென்தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 5ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.1.30 மணியளவில் வடமராட்சி யா/கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் வணக்கத்துக்குரிய சகோதரி எல்.ஜெகநாயகி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் கே.பி.ஆனந்தநடேசன் கலந்துகொண்டு வெற்றியீட்டும் மாணவர்களுக்கான பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ஓ)

# ஆன்மீக நிகழ்வு

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சுழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையால் நடாத்தப்படும் வாராந்த ஆன்மீக நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆர்.வி.கந்தசாமி ஜே.பி. குழுவினரின தெய்வீக நாம பஜனை இடம்பெறவுள்ளது. (ஓ)

# திருமறைக் கலாமன்றத்தின் கலை நிலா அரங்கு

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் இசை நாடகப்பிரிவும், கலைத்தூது அழகியல் கல்லூரியும் இணைந்து நடத்தும் கலை நிலா அரங்கு எதிர்வரும் 5, 6ஆம் (சனி, ஞாயிறு) திகதிகளில் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

இரு நாள்களிலும் பி.ப.4.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ள கலை நிலா அரங்கில் கலைநிகழ்வுகளாக முதலாம் நாளில் சங்கீத கலாவித்தகர் திருமதி சரோஜா ஜஸ்ரின் குழுவினரின் இசைக்கச்சேரியும், கலைவேந்தன் ம.தைரியநாதன் குழுவினரின் 'பூதத்தம்பி' இசை நாடகத்தின் ஒரு பகுதியும் இடம்பெறும்.

இரண்டாம் நாளில் இசைக்கலைமாணி திருமதி சுகன்யா அரவிந்தன் குழுவினரின் இசைக்கச்சேரியும், கலைவேந்தன் ம.தைரியநாதன் குழுவினரின் 'அரிச்சந்திர மயான காண்டம்' இசை நாடகத்தின் ஒரு பகுதியும் இடம்பெறவுள்ளது. (அ)

# ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை யால் மாதம் தோறும் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' பங்குனி மாத இதழ் பல அரிய ஆன்மீகக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது. (ஓ)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில், கல்லூரி அதிபர் வ.சிறீகாந்தன் தலைமையில் கல்லூரி ஆசிரியர்களுக்கான சுவாமி விவேகானந்தரின் ஆளுமை பற்றிய கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா கலந்துகொண்டு சுவாமி விவேகாந்தரின் ஆளுமை பற்றிய கருத்துரையை வழங்கவுள்ளார். (ஓ)

# தொழில்நுட்பக் கல்லூரிகளின் இறுதிப் பரீட்சை 2008 (யூன்)

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் யூன் மாதம் நடைபெறவுள்ள தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் தொழில்நுட்பக் கல்வி பயிற்சி திணைக்களத் தால் கோரப்பட்டுள்ளது.

ஆறுமாத. ஒருவருட, இரண்டு வருட, பயிற்சியினை பூர்த்தி செய்த மாணவர் களும், மீள் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர் களும் விண்ணப்பப் படிவத்தினை பூர்த்திசெய்து இம்மாதம் 10 ஆம் திகதி வியா ழக்கிழமைக்கு முன் கல்லூரி பரீட்சைப் பகுதியில் ஒப்படைக்குமாறு யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் எம்.யோகராஜன் கேட்டுக்கொள்கின்றார். (அ)

# வருடாந்த மஹோற்சவம்

(அல்வாய்)

அல்வாய் சாமாணந்தறை ஆலடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 21ஆம் திகதி திங்கட்கிழமை வரை பதினொரு நாட்கள் தொடர்ந்து நடைபெற்று பூங்காவனத் திருவிழாவுடன் இனிது முடிவுறும்.

இத்திருவிழாவை முன்னிட்டு அல்வாயூர் சிவநேசனால் ஆக்கப்பட்ட வெண்பாக்கள் கொடியேற்றத் திருவிழா தொடக்கம் பூங்காவனத்திருவிழாவரை தினமும் பிரசுரமாகும். (அ)





கடந்த 24.02.2008 அன்று நடைபெற்ற செங்குந்த இந்துக்கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினர்களான கலாநிதி ம.குழந்தை சண்முகலிங்கம், திருமதி. சண்முகலிங்கம் சிறப்பு விருந்தினர்களான திரு கே.வி.குணசேகரம், செ.குகதாசன் ஆகியோருடன் கல்லூரி அதிபர் இ.பாலகுமார் , திருமதி ரூ.இராஜரட்ணம், தி.ரவீந்திரநாதன். எச்.எஸ்.சர்மா ஆகியோர் நிற்பதையும் விருந்தினர்கள் பாண்ட் வாத்திய சகிதம் மைதானத்துக்கு அழைத்துவரப்படுவதையும் நிகழ்வை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைப் பதையும் படங்களில் காணலாம்.

# முஷாரப்பை பதவி நீக்க முயலமாட்டோம் அமெரிக்காவுக்கு ஆளும் கூட்டணி அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பை பதவி நீக்கம் செய்யும் சூழ்நிலையை நாங்கள் உரு



வாக்க மாட்டோம். அதே நேரம் ஆளும் கூட்டணிக்குள் குழப்பம் ஏற்படுத்த முயன்றால் அதைப் பொறுத்துக்கொள்ள மாட்டோம் என்று ஆளும் கூட்டணி தெரிவித்துள்ளது.

## உலக தரிசனம்

### அமெரிக்கா ஆதரவு

பாகிஸ்தானில் புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்து எடுக்கப்படுவதற்கு முன்பாக பழைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் அதிபர் பதவிக்கு தன்னை முஷாரப் தேர்ந்து எடுத்துக்கொண்டார். பாராளுமன்ற தேர்தலில் அவரது ஆதரவுக் கட்சியான முஸ்லிம்லீக் (குரேஷி)கட்சி தோல்வி அடைந்தது.

அவருக்கு எதிர்ப்பாக செயல்பட்ட மக்கள் கட்சியும் நவாஸ் ஷெரீப் கட்சியும் அதிக இடங்களில் வெற்றி பெற்றுக்கூட்டணி ஆட்சி அமைத்துள்ளன. இந்த நிலையில் முஷாரப்பை அதிபர் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்ற கோரிக்கை ஆளும் கூட்டணியில் ஒரு சிலர் மத்தியில் எழுந்தது. ஆனால் அமெரிக்கா முஷாரப் பதவியில் நீடிப்பதற்கு ஆதரவாக வுள்ளது.

### புஷ்சுக்கு உறுதிமொழி

அமெரிக்க அதிகாரிகள் ஜோன் நெக்ரோபோன்டே, றிச்சட் பௌச்சர் ஆகியோர் பாகிஸ்தான் சென்று இருக்கிறார்கள். அவர்கள் ஆளும் கூட்டணியை சேர்ந்த தலைவர்களை சந்தித்து பேசினார்கள். அப்போது முஷாரப்பை பதவி நீக்கம் செய்யும் சூழ்நிலையை நாங்களாக உருவாக்க மாட்டோம் என்ற உறுதிமொழியை புஷ்சுக்கு அளிப்பதாக அவர்கள் தெரிவித்தனர். அதேநேரத்தில் அரசாங்கத்துக்குள்ளும் கூட்டணிக்குள்ளும் முஷாரப் குழப்பத்தை ஏற்படுத்த முயன்றால் அதை நாங்கள் பொறுத்துக்கொள்ளமாட்டோம் என்றும் தெரிவித்தனர்.

தீவிரவாதத்தை அரசியல் வழிகளில் ஒடுக்குவோம் என்றும் அவர்கள் அமெரிக்க அதிகாரிகளிடம் தெரிவித்தனர். (அ-5)

# தென்கிழக்கு ஆசியாவுடன் சீனாவை இணைக்கும் புதிய நெடுஞ்சாலை

(தென்கிழக்கு ஆசியா)

தென்கிழக்காசியாவுடன் சீனாவை இணைக்கும் புதிய நெடுஞ்சாலையொன்று கடந்த திங்கட்கிழமை வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

சீனாவின் யுன்னான் மாகாணத்தையும் வட தாய்லாந்தையும் லாவோஸ் ஊடாக இணைக்கும் இந்நெடுஞ்சாலை திறப்பு விழாவில் சீனா பிரதமர் வென் ஜியாபா வோ, லாவோஸ் பிரதமர்பவுவாஸோன், பவுபவான், தாய்லாந்து பிரதமர் சாமக் சுந்தரவேஜ் மற்றும் ஆசிய அபி விருத்தி வங்கித் தலைவர் ஹருஹிகோ குரோடா ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-5)

# ஜனாதிபதி வேட்பாளருக்கான போட்டியை —முடிவுக்கு கொண்டுவர வேண்டும்—

## ஜனநாயகக்கட்சி சபாநாயகர் வேண்டுகோள்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாய கக்கட்சி சார்பில் வேட்பாளரை நியமிப்பதற்கான போட்டியை விரைவில் முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்று பாராளுமன்ற சபாநாயகரும் ஜனநாயகக்கட்சி பிரமுகருமான பெலோசி கேட்டுக்கொண்டு இருக்கிறார்.

### கடும் போட்டி

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வருகிற நவம்பர் மாதம் 4ஆம் திகதி நடக்கிறது. இந்த தேர்தலில் குடியரசுகக்கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஜோன் மெக்கைன் என்பது முடிவாகி விட்டது. ஆனால் ஜன நாயகக்கட்சி சார்பில் போட்டியிட விரும்பும் இலினாய்ஸ் செனட்டர் ஒபாமா, நியூயார்க் செனட்டர் ஹிலாரி இடையே போட்டி கடுமையாகவுள்ளது.

இந்த போட்டியை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்று ஜனநாயகக் கட்சி பிரமுகரும் சபாநாயகருமான பெலோசி கேட்டுக்கொண்டு இருக்கிறார்.

அவர் ஒரு டி.வி.சேனலுக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக்கட்சி வெற்றி பெற வேண்டுமானால் உடனடியாக ஒரு வேட்பாளர் முன்பு கட்சி திரள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்.

அவர் எந்த ஒரு வேட்பாளருக்கும் தன் ஆதரவை தெரிவிக்கவில்லை. இதற்கிடையில் கட்சியின் தேசிய தலைவர் ஹோவர்டுடீன் கூறுகையில் வருகிற ஜூலைக்குள் போட்டி முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

### ஹிலாரி போட்டியில் இருந்து விலகக் கோரிக்கை

இதற்கிடையில் ஒபாமாவின் ஆதாரவாளர்கள் ஹிலாரி தோல்வியை ஒப்புக் கொண்டு போட்டியில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். ஆதர வாளர்களின் கோரிக்கையை ஒபாமா ஏற்க மறுத்து விட்டார் அவர் விரும்பும் வரை போட்டியில் நீடிக்கட்டும் என்று கூறி இருக்கிறார்.

இதற்கிடையில் ஹிலாரி தேர்தல் பிரசாரத்துக்கு போதுமான நிதி இல்லாமல் திண்டாடுகிறார். அவர் செலுத்தவேண்டிய கோடிக் கணக்கான ரூபாய்க்கான பில்கள் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. (அ-5)

# ஒலிம்பிக் போட்டியின் போது திபெத்தியர் தற்கொலைப் படை தாக்குதலுக்கு திட்டம்

(பீஜிங்)

சீனாவின் ஆதிக்கத்தில் இருந்து திபெத்தை விடுவிக்கக் கோரி திபெத்தியர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

திபெத்தில் நடந்த கலவரத்தில் 140க்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள்.

பல்வேறு நாடுகளில் வசிக்கும் திபெத்தியர்களும் சீனாவுக்கு எதிராக போராட்டம் நடத்தி வருகிறார்கள். திபெத்தியர்களின் போராட்டத்துக்கு ஆதரவு அளிக்கவேண்டாம் என்று இந்தியா உட்பட பல்வேறு நாடுகளை சீனா வற்புறுத்தி வருகிறது.

இந்த நிலையில் சீனாவில் பீஜிங்நகரில் ஆகஸ்ட் மாதம் ஒலிம்பிக் போட்டி நடக்க இருக்கிறது. இந்த ஒலிம்பிக் போட்டி நடக்கும் போது திபெத்தியர்கள் தற்கொலை படை தாக்குதல் நடத்தி ஒலிம்பிக் போட்டியை சீர்குலைக்க திட்டமிட்டு இருப்பதாகவும் சீனா புகார் கூறியுள்ளது.

இந்தியாவில் தங்கி இருக்கும் திபெத்தின் மதத் தலைவர் தலாய்லாமாவை தங்களிடம் ஒப்படைக்கும்படியும் இந்தியாவை சீனா வற்புறுத்தி வருகிறது. (அ-5)


# பெரிய அளவில் நிதிச் சீர்திருத்தம் புஷ் நிர்வாகம் திட்டம்

(அமெரிக்கா)

அமெரிக்காவின் நிதிச் சந்தைகள் நிர்வகிக்கப்படும் விதத்தை பெரிய அளவில் மாற்றியமைப்பதற்கான பிரேரணைகளை புஷ் நிர்வாகம் முன்மொழிந்துள்ளது.

1920 களின் பிற்பகுதியில் ஏற்பட்ட பெரும் பொருளாதாரப் பின்னடைவுக்குப் பின்னர் செய்யப்பட்ட மாற்றங்களுக்குப் பின்னர் அறிவிக்கப்பட்ட சீர்திருத்தங்களில் மிகப் பெரிய அளவிலானவை இவையே என்று அது தெரிவித்துள்ளது.

இந்த சீர்திருத்த பிரேரணைகளை அறிவித்த அமெரிக்க கருவூலச் செயலர் ஹென்றி பால்சன் நிதித்துறை மொத்தத்துக்குமே ஸ்திரத்தன்மையை பாதுகாக்கும் கூடுதல் அதிகாரம் மத்திய ரிஸர்வ் வங்கிக்கு இத்திட்டம் வழங்கும். நிதித்துறை கண்காணிக்கும் பணி ஒரே நிறுவனத்துக்கு கொண்டுவரப்படும் என்று கூறி



னார். இது ஒரு நெடுங்காலத் திட்டம் என்றும் தற்போதைய நிதிச்சந்தை நெருக்கடியை மட்டும் கருத்தில் கொண்டு எடுக்கப்படும் நடவடிக்கை அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்துக்குநாடாளுமன்றஒப்புதல்கிடைத்தால்தான் அது நடைமுறைக்கு வரும். (அ-5)

# ஒலிம்பிக் போட்டி துவக்க விழாவில் அமெ. அதிபர் பங்கேற்கக் கூடாது

## மக்கள் பிரதிநிதிகள் சபையில் மசோதா

(வோஷிங்டன்)

பீஜிங்கில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளின் துவக்க விழாவில் அமெரிக்க அதிபர் புஷ் பங்கேற்பதை தவிர்க்கும் சட்ட மசோதா அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபையில் முன்மொழியப்பட்டுள்ளது.

திபெத்தியர்கள் மீது சீனா நடத்தி வரும் அடக்குமுறைகள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த மசோதாவை குடியரசுக் கட்சியை சேர்ந்த கொள்கைகள் குழுவின் தலைவர் தாடிஸ்மெக்காட்டர் அறிமுகம் செய்துள்ளார். பல்வேறு உறுப்பினர்கள் இந்த மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்திருப்பதாக மெக்காட்டரின் உதவியாளர் கூறியுள்ளார்.

அமெரிக்கா அரசு அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ஒலிம்பிக் போட்டிகளின் துவக்க விழாவில் பங்கேற்பதை தடுக்க வேண்டும் என்று மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திபெத் பிரச்சினையில் சீனாவில் நடவடிக்கைகளுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள பல்வேறு உலக நாடுகளின் தலைவர்களும் ஒலிம்பிக் தொடக்க விழாவில் புஷ் பங்கேற்கக்கூடாது என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால் ஒலிம்பிக் துவக்க விழாவில் கலந்து கொள்ள புஷ் திட்டமிட்டுள்ளார். (அ-5)

# டயானா மரணத்தில் "சதி இல்லை" மரணவிசாரணை அதிகாரி தகவல்

(வேல்ஸ்)

வேல்ஸ் இளவரசி டயானாவைக் கொல்வதற்கான சதியில் எலிசெபத் இராணியின்



கணவரான பிலிப் இளவரசருக்கோ அல்லது பிரிட்டிஷ் உளவுப் பிரிவினருக்கோ தொடர்பு இருந்ததற்கான ஆதாரம் எதுவும் கிடையாது என்று அவரது மரணம் குறித்த விசாரணைகளை நடத்திவரும் மரண விசாரணை அதிகாரி கண்டறிந்துள்ளது.

1997இல் பரிஸ் நகரில் டயானாவுடன் கார் விபத்தில் பலியான அவரது நண்பரான டோடி அல் பயட் அவர்களின் தந்தையான முஹமட் அல் பயட் அவர்களால் இந்தக் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

6 மாதங்கள் நடந்த விசாரணைகளின் பின்னர் தனது கருத்தை வெளியிட்ட சட்டத் துறைப் பிரபுவான ஸ்கொட் பேக்கர் குறித்த அல் பயட் குற்றச்சாட்டுகள் பல ஆதாரம் எதுவும் இன்றி முன்வைக்கப் பட்டவை என்றும் அவரது சட்டத்தரணிகளே அவற்றை முன்னெடுத்துச் செல்வதை நிறுத்தி விட்டனர் என்றும் ஜூரிகளிடம் கூறினார். (அ-5)

# இதுவரை இல்லாத அளவு நட்டத்தில் சுவிஸ் நாட்டின் மிகப் பெரிய வங்கி

உலக அளவில் இது வரை இல்லாத அளவு வர்த்தக நட்டம் தமக்கு ஏற்பட்டுள்ளதாக சுவிஸ் நாட்டின் மிகப் பெரிய வங்கிகளில் ஒன்றான யூ.பி. எஸ். அறிவித்துள்ளது.

அமெரிக்காவில் வீட்டுக் கடன்கள் கொடுத்தது தொடர்பில் ஏற்பட்ட நெருக்கடியின் விளைவாகவே தமக்கு இந்த இழப்பு ஏற்பட்டதாக அந்த வங்கி தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் மாத்திரம் 19 பில்லியன்டொலர்கள் அளவுக்கு கடன்களை தள்ளுபடி செய்துள்ளதாக யூ.பி.எஸ். தகவல் வெளியிட்டுள்ளது. ஏற்கனவே கடந்த ஆண்டு அந்த வங்கி 18 பில்லியன் டொலர்கள் அளவுக்கு கடன்களை தள்ளுபடி செய்திருந்தது. வங்கியின் தலைவர் மார்ஸெல் ஆஸ்பெல் அவர்கள் பதவி விலகுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதே போன்று ஐரோப்பாவின் மற்றொரு மிகப் பெரிய வங்கியான டாய்ட்ச் வங்கியும் (ஜெர்மன் வங்கி) கவலையளிக்கக் கூடிய புள்ளிவிபரங்களை வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியின் காரணமாக இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மாத்திரம் சுமார் நான்கு பில்லியன்டொலர்கள் இழப்பு ஏற்படக் கூடும் என தாம் எதிர்பார்ப்பதாக டாய்ட்ச் வங்கி கூறியுள்ளது. (அ-5)

# யாழ். மாவட்டத்தில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிவரும் சூழல் பாதுகாப்பு

எமது சூழலைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். நாம் சூழலைப் பாதுகாத்தால் சூழல் எம்மைப் பாதுகாக்கும். அது மட்டுமல்லாமல் சூழலை உரிய முறையில் பாராமரிப்பதால் நாம் பல்வேறு அனுகூலங்களையும்பெறக் கூடியதாக இருக்கும். ஒரு மனிதன் சுகதேகியாக வாழ்வதற்கு அவனது சுற்றுப்புறச்சூழலின் தாக்கம் முக்கிய பங்கை வகிக்கிறது. சூழல் பல்வேறுபட்ட கூறுகளாலானது. அதாவது வளி நீர் தரை போன்றவை இவற்றுள் அடங்கும்.

நாம் எமது சூழலை பல்வேறு வகைகளில் பாதுகாக்கலாம் அதாவது பொலித்தீன் பாவனையைத் தடைசெய்தல், கழிவுகளை உரிய முறையில் அழித்தல், வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் புகையைக் குறைத்தல் மரங்களை வளர்த்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

எமது யாழ் .குடாநாட்டில் நாம் சுகதேகியாக வாழ்வதற்கு காரணமாக அமைபவை எம் முன்னோர்கள் வைத்து விட்டுச் சென்ற பாரிய விருட்சங்களே. அவற்றுள் பெரும்பாலானவை பல காரணிகளால் கடந்த காலங்களில் அழிவடைந்து கிடப்பதை நாம் எம் கண்களாலேயே காண்கிறோம். ஆகவே இப்பாரிய விருட்சங்களை மீண்டும் உருவாக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இதைச் செய்வதனால் எமது எதிர்கால சந்ததியினரை சுகதேகியாக வாழ வைக்கலாம்.

பல்வேறுபட்ட அரசசார்பற்ற நிறுவனங்களும் பல அரச செயலகங்களும் இத்திட்டத்தில் மிகவும் அக்கறையுடன் செயற்படுவது பாராட்டத்தக்கது. இவை அனைத்திலிருந்தும் உச்சப்பயனைப் பெறுவதற்கு அதாவது ஒரு பசுமையான சூழலை உருவாக்குவதற்கு மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாததாகும்.

அனைவரும் தத்தமது வீடுகளில் அல்லது வீட்டுக்குப் பின்புறமாகவுள்ள காணிகளில் தங்களால் இயன்ற அளவுக்கு மரங்களை நட்டு வைப்பதன் மூலம் எமது பெயரை எதிர்காலச் சந்ததியினர் உச்சரிப்பதற்கு வழிவகுக்கவேண்டும்.

பல புல் வெளிகள் இருக்கின்றன. நிலத்தரவைகள் இருக்கின்றன. யாழ். மாவட்டத்திலே கல்லுண்டாவெளி, வல்லை வெளி, காக்கைதீவு போன்ற மக்கள் பயன்பாடற்ற வெளிகள் பல இருக்கின்றன. இவற்றில் எல்லாம் அந்தந்தத் தரைகளில் வளரக்கூடிய மரங்களை நாட்ட வேண்டும். குறிப்பாக வல்லை வெளிப்பரப்பில் சவுக்கு மரங்களை நாட்டுவது உகந்ததாகும். அதே போன்று கல்லுண்டாய் வெளிக்கும் காக்கைதீவுக்கும் சவுக்கு சமண்டலை மகோகனி போன்ற மரங்கள் பொருத்தமானதாக இருக்கும். இதனூடாக அவ் வெளிகளில் காணப்படுகின்ற பல்வகையான இயற்கை வளங்களைப் பாதுகாக்க முடியும். இது தவிர பாரிய விருட்சங்களான தேக்கு மகோகனி போன்றவற்றால் உயர்ந்த வருமானத்தைப் பெறக் கூடிய வாய்ப்பு ஏற்படும். ஒரு குறிப்பிட்ட வெளிப்பிரதேசத்திலே தேக்கு அல்லது மலைவேம்பு போன்ற மரக்கன்றுகளை வைத்தால் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சூழலைப் பாதுகாப்பது மட்டுமல்லாது வருமானத்தையும் ஈட்டித்தரும் ஆகவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது சூழலிலே குறைந்தது ஒரு மரத்தையாவது நாட்டி எமது சூழலை நாம் பாதுகாக்க முன்வர வேண்டும்.

இதேபோன்று யாழ்.மாவட்டத்தில் தற்போது பொலித்தீன் பாவனை என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது. இதனால் எதிர் காலத்தில் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளுக்கு நாம் காரணகர்த்தாக்களாக விளங்கப் போகின்றோம்.

இயன்றளவில் பொலித்தீன் பாவனையை முற்றுமுழுதாகத் தடை செய்ய வேண்டும். அவ்வாறு முடியாவிட்டால் குறைக்கவாவது நாம் முயற்சி எடுக்கவேண்டும். அதை விடுத்து பொலித்தீன் பாவனையை ஊக்கப்படுத்தும் செயற்பாடுகளில் நாம் அனைவரும் ஊக்கத்தைச் செலுத்தினால் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் யாழ். மாவட்டம் முழுவதும் மண் வளம் கெடுவதை யாராலும் தடுக்க முடியாது போய்விடும்.

பொலித்தீன் பாவனை என்று குறிப்பிடும் போது நாம் அதிகளவில் கருத்தில் கொள்வது அல்லது அதிக மக்களின் பாவனைப் பொருட்களாகக் காணப்படுவது சொப்பிங் பாக்

**தி.திருசாந்**
**SOND நிறுவனம்**
**யாழ்ப்பாணம்.**

மற்றும் உணவு சுற்றும் பேப்பர் (லஞ்சீற்) ஆகியனவாகும். இவை இரு பொருட்களுமே சூழல் பாதுகாப்பில் மிகவும் அச்சுறுத்தலாகக் காணப்படுகின்ற பொலித்தீன்களாகும். இவையிரண்டும் இலகுவில் உக்கும் தன்மையைக் கொண்டிருக்காது நீண்ட நாட்களுக்குள் மண்ணுக் குள் புதையுண்டு கிடந்து மண்ணின் வளத்தைப் பாதிக்கும்.

இவ்விடயங்கள் தொடர்பாக சமூகத்தில் அக்கறையுள்ள நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும். செயற்பட வேண்டும்அதாவது இவற்றைத் தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு இப் பொருட்களை மிண்டும் மீண்டும் பாவனை செய்யலாம் அல்லது கழிவாகக் காணப்படும் பொலித்தீன்களை மண்ணுக்குள் செல்லவிடாமல் எரித்து விடலாம். வீட்டில் அடிக்கடி பாவனை செய்யும் பொலித்தீன்களைக் குறைக்கலாம். இவ்வாறு எமது யாழ். குடாநாட்டின் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காதவிடத்து இவ் அனர்த்தத்தால் யாழ். மாவட்டம் முழுவதுமே இவ்பாதிப் புக்குள்ளாகக் கூடிய நிலை வெகு விரைவில் உருவாகும்.

இவ்விடயங்களில் பொது மக் கள் மட்டுமல்லாமல் விற்பனை நிலைய உரிமையாளர்கள், வர்த்தகர்கள் அதிகாரிகள் என பல்வேறு தரப்பினரும் அக்கறை செலுத்தி பொலித்தீன் பாவனையை இயன்றளவுக் குக் குறைக்கவேண்டும்.

இது எமது மாவட்டம் அல்லது இது எமது கிராமம் என்ற எண் ணப் பாங்குடன் மக்கள் அனை வரும் செயற்படவேண்டும். இவ்வாறு அனைத்துத்தரப்பினரும் இணைந்து செயற்படுவதன் ஊடாக எமது சுற்றாடலை நாம் சுத்தமாக வைத்திருப்பது மட்டு மல்லாமல் இன்னும் ஒரு சில காலப் பகுதிக்குள் யாழ். குடா நாட்டில் ஏற்படக் கூடிய பாரிய அனர்த்தத்தினைக் குறைக்க முடியும். *









கிராமிய கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இணைந்து 2006ஆம் ஆண்டு நடாத்திய சிறந்த தொழில் முயற்சியாளர்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கும் நிகழ்வும் 2007ஆம் ஆண்டிற்கென தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான உறுதிமடல் வழங்கும் நிழ்கவும் யாழ்.செயலக மாநாட்டுமண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற போது 2006 ஆண்டிற்கென தெரிவு செய்யப்பட்டவர்களில் இருவருக்கு உரிய சான்றிதழ்களை யாழ் அரச அதிபர் வழங்குவதை முதல் இரு படங்களிலும் 2007ஆம் ஆண்டிற்கென தெரிவு செய்யப்பட்ட கரிகணன் பிறின்டேர்ஸ் நிறுவன இயக்குநர் எஸ்.ராஜ்குமாருக்கு இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என். சிவரட்ணம் உறுதிக்கடிதம் வழங்குவதை மூன்றாவது படத்திலும் இன்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள 2007 ஆம் ஆண்டில் அகில இலங்கை மாகாண மட்டத்தெரிவில் முதலாம் இடத்தைப் பெற்றவர்களுக்கான விருது வழங்கல் நிகழ்வுக்கு தெரிவு செய்யப்பட்ட 12 பேர் யாழ் .அரச அதிபர். மேலதிக அரச அதிபர் மற்றும் அதிகாரிகளுடன் காணப்படுவதை நான்காவது படத்திலும் காணலாம்.

## அரிசியின் விலை மேலும் அதிகரிக்கலாம்

இந்திய அரசாங்கத்தினால் அரிசி ஏற்றுமதி தடை செய்யப் பட்டதனால் உள்ளூர் அரிசி சந்தையில் பாரிய தாக்கம்ஏற்பட்டிருப்பதாக மொத்தவியாபாரிகள் தெரிவிக் கின்றார்கள்.

இலங்கைக்கு நிவாரண விலையில் அரிசியை ஏற்றுமதி செய்து வந்த இந்தியா தற்போது ஏற்றுமதிக்கான தடையை விதித்தமையே இதற்கான காரணம் என்றும் கூறப்படுகிறது.

பாசுமதி அரிசியைத் தவிர்ந்த ஏனைய அனைத்து ரக அரிசியையும் ஏற்றுமதி செய்ய த்டை விதிப் பது என்று இந்திய அரசு நேற்றுமுன் தினம் தீர்மானித்தது. இந்நிலையில் எதிர்காலத்தில் அரிசியின் விலை மேலும் அதிகரிக்கக் கூடும் என்றுபுறக் கோட்டைபழைய சோகை தெரு மொத்த வியாபாரிகள் சங்கத் தலைவர் கே.பழனியாண்டி தெரிவித்தார். (அ-7)

## இல்ல விளையாட்டு போட்டி - 2008

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இல்ல விளை யாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளது.

பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (அ)


Calling For Tender -Teaching Hospital, Jaffna

## Tiling to OPD MAIN HALL

01. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tender for Tiling to OPD Main hall, TH, Jaffna up to 10.00 am on 16.04.2008. Tender form may be collected from Director, TH, Jaffna up to 08.04.2008 on payment of non refundable deposit of Rs. 1000/-
02. Tender will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representative are requested to be present at the opening of Tenders.
03. Tender forms are issued only contractors have been valid registration in Grade M9 and above in the field of Building Constructions and other institute of Constructions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Sri Lanka (NCCASL).
04. Sealed Tender may be dispatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00am on 16.04.2008.
05. Tender Document may be inspected free of charge at the Residence Engineers Office, CECB, Jaffna.
06. For further details please contact Hospital Secretary, TH, Jaffna.

**The Chairman,**
**Divisional Tender Board,**
**Teaching Hospital,**
**Jaffna.**

(C/946)

# 5 ஆண்டுகள் விளையாடத் தடையை எதிர்த்து நீதிமன்றிற்கு செல்வேன்

## அக்தர் தெரிவிப்பு; மீண்டும் அணியில் விளையாடுவேன் எனவும் நம்பிக்கை

(ராவல் பிண்டி)

சர்ச்சைக்குரிய சோயிப் அக்தருக்கு இன்னொரு சிக்கல். நடத்தை விதிகளை மீறியதற்



காக 5 ஆண்டுகள் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க தடைவிதிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து இவரது சர்வதேச கிரிக்கெற் வாழ்க்கை அனேகமாக முடிவுக்கு வருகிறது.

பாகிஸ்தான் அணியின் புயல்வேக பந்து வீச்சாளர் அக்தர். இவர் சர்ச்சைகளில் சிக்கிக் கொள்வது சகஜமான விடயம். இதன் உச்சக் கட்ட மாக கடந்த ஆண்டு ஒக்டோபரில் நடந்த 'இருபது-20' உலககோப்பை தொடரின் போது சக வீரர் முகமட் ஆசிப் தொடையில் துடுப்பால் பலமாக தாக்கினார். இதையடுத்து இவருக்கு13 போட்டிகளில் தடைமற்றும் 34 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

பின்னர் இந்த ஆண்டு ஜனவரியில் அறிவிக்கப்பட்ட வீரர்களுக்கான ஒப்பந்த பட்டியலில் இருந்து நீக்கப்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த அக்தர் , கிரிக்கெற் சபை நிர்வாகிகளை கடுமையாக விமர்சித்தார். இதேபோல் 'பி' பிரிவில் இருந்து 'சி' பிரிவுக்கு தள்ளப்பட்ட கனேரியாவும் சாடினார். இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என பாகிஸ்தான் கிரிக்கெற் சபை எச்சரித்தது.

### தப்பினார் கனேரியா

முன்தினம் ஒழுங்கு நடவடிக்கை குழு முன்பு அக்தர், கனேரியா ஆஜராயினர் பாகிஸ்தான் சபை பற்றி வெளிப்படையாக விமர்சித்ததாக இவர்கள் மீது புகார் கூறப்பட்டது. இதற்கு தண்டனையாக அக்தருக்கு 5 ஆண் டுகள் தடை விதிக்கப்பட்டது. கனேரியா முதல் முறையாக தவறு செய்திருப்பதால் எச்சரிக்கையுடன் தப்பினார். இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெற்சபை தலைவர் நசிம் அஷ்ரப் கூறியது,

சோயிப் அக்தர் மீது நம்பிக்கை இழந்து விட்டோம். தொடர்ந்து தவறுகள் செய்து வருகிறார். இவர் இடம்பெற்றால், பாகிஸ்தான் அணியின் 'இமேஜ்' ஒட்டுமொத்தமாக பாதிக்கப்படும். இவருக்கு 5 ஆண்டுகள் தடை விதிக்கப்படுகிறது. இந்த காலக்கட்டத்தில் பாகிஸ்தான் அணி அல்லது பாகிஸ்தானின் எந்த பகுதியிலும் விளையாட முடியாது. திறமையான வீரரான அக்தருக்கு இந் நாள் சோகமானதாக அமைந்துவிட்டது. கனேரியா முதல் முறையாக தவறு செய்துள்ளதால் கண்டனத்துடன் தப்பினார். இனி இவர் பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுக்கக்கூடாது. இவ் வாறு நசிம் அஷ்ரப் கூறினார்.

### நீதிமன்றம் செல்வேன்

இந்த முடிவை எதிர்த்து அக்தர் மேல் முறையீடு செய்யலாம் . இது குறித்து அக்தர் கூறியதாவது, சம்பள ஒப்பந்தத்தில் இருந்து என்னை நீக்கியபோது ஆத்திரத்தில் ஏதோ பேசினேன். இதற்காக ஒழுங்கு நடவடிக்கை குழுவின் விசாரணையின் போது, அனைவரது முன்பாகவும் வருத்தம் தெரிவித்தேன். எனவே குறைவான தண்டனை விதிக்கப்படும் என எதிர்பார்த்தேன். ஆனால் 5 ஆண்டுதடை விதித்து கடும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நாட்டுக்காக விளையாட இன்னும் ஆர்வமாக உள்ளேன். அதிவேகமாக பந்துவீசுவதால் நான் காயம் அடைவது சகஜம். அணிக்காக நூறு சதவீதம் திறமை வெளிப்படுத்தியுள்ளேன். இது பற்றி அணித்தலைவர் சோயிப் மலிக் பயிற்சியாளர் லோசனிடம் கேட்கலாம். இவர்கள் எனது அர்ப் பணிப்பு உணர்வு பற்றி சொல்வார்கள். எனக்கு எதிராக சிலர் சதி செய்துள்ளனர். தடையை எதிர்த்து நீதிமன்றிற்கு செல்வேன். மீண்டும் பாகிஸ்தான் அணிக்காக விளையாடுவேன் இவ் வாறு அக்தர் கூறினார்.

தற்போது 32 வயதான அக்தர் 46 டெஸ்டில் 178 விக்கெற் மற்றும் 138 ஒருநாள் போட்டிகளில் 219 விக்கெற் வீழ்த்தியுள்ளார். இவர் ஏற்கனவே சிம்பாவே, பங்களாதேஷ் அணிக்கு எதிரான தொடர்களில் இருந்து நீக் கப்பட்டுள்ளார். தற்போதைய தடை இவருக்கு பேரிடியாக அமைந்துள்ளது.

### ஐ.பி.எல்லில் விளையாடலாம்

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பில் அக்தர் விளையாடலாம். இவர் ஷாருக் கானின் 'கோல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக ரூ.1.82 கோடிக்கு வாங்கப்பட்டார். இது பற்றி பாகிஸ்தான் கிரிக்கெற்சபைத் தலைவர் நசிம் அஷ்ரப் கூறுகையில், அக்தருக்கு விதிக்கப்பட்ட தடை பாகிஸ்தானில் மட்டுமே பொருந்தும். ஐ.பி.எல். போட்டிகள் எங்களது எல் லைக்குள் வரவில்லை. அதனால் ஐ.பி. எல். போட்டிகளில் தாராளமாக பங்கேற்கலாம் என்றார்.

### அக்தருக்கு கிடைத்த தண்டனை

**டிசம்பர் 1999:** பந்தை எறிவதாக கூறி தடை விதிக்கப்பட்டார்

**பெப்ரவரி 2000** அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தில் வீரர்களின் நடத்தை விதியை மீறியதற்காக டெஸ்டில் விளையாட தடை. ரூ.50 ஆயிரம் அபராதம்.

**ஜனவரி 2001** 2ஆவது முறையாக பந்தை எறிவதாக கூறி தடை.

**நவம்பர் 2002** சிம்பாவேயில் ரசிகர் மீது போத்தலை எறிந்ததற்காக ஒருநாள் போட்டியில் (ஒரு ஆட்டம்) தடை. சம்பளத்தில் 50 சதவீதம் அபராதம்.

**டிசம்பர் 2002** பந்தில் தில்லு முல்லு (டேம்பிரிங்) செய்ததற்காக ஒரு டெஸ்டில் தடை.

**மே 2003** இலங்கையில் நடந்த 3 நாடுகள் போட்டியில் பந்தில் தில்லுமுல்லு செய்ததற்காக 2 ஒருநாள் போட்டியில் தடை. சம்பளத்தில் 75 சதவீதம் அபராதம்.

**ஒக்டோபர் 2003** தென்னாபிரிக்க வீரர் பொல் அடம்சை மோசமாக திட்டியதற்கு ஒரு டெஸ்ட் மற்றும் 2 ஒருநாள் போட்டியில் தடை

**டிசம்பர் 2004** அவுஸ்திரேலிய பயணத்தில் துடுப்பாட்டவீரரை கேலி செய்ததற்கு 40 சதவீதம் அபராதம்.

**ஒக்டோபர் 2006** போதை மருந்து பயன்படுத்தியதால் 2 ஆண்டு தடை. மேல்முறையீட்டுக்கு பின்னர் தடை நீக்கப்பட்டது.

**ஆகஸ்டு 2007** பயிற்சி முகாமில் இருந்து அனுமதி பெறாமல் சென்றதற்கு ரூ. 2 லட்சம் அபராதம்

**ஒக்டோபர் 2007** சக வீரர் முகமட் ஆசிப்பை துடுப்பால் தாக்கியது மற்றும் ஒழுங்கு நடவடிக்கையை 5ஆவது முறையாக மீறியதற்காக 13 போட்டியில் விளையாட தடை. ரூ. 34 இலட்சம் அபராதம்.

**ஏப்ரல் 2008** பாகிஸ்தான் கிரிக்கெற் சபையை விமர்சித்ததற்காக 5 ஆண்டுதடை. (5)

# இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பமாகிறது

(அகமதாபாத்)

இந்திய தென்னாபிரிக்க அணிகளிற்கிடையிலான இரண்டாவது கிரிக்கெற் டெஸ்ட் இன்று அகமதாபாத்தில் ஆரம்பமாகிறது. கிரைம் சிமித் தலைமையிலான தென்னாபிரிக்க அணி இந்தியா வருகை தந்துள்ளது. இரு அணிகளும் மோதிய முதல் டெஸ்ட் போட்டி சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது.

இந்த டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. இந்த டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்திய வீரர் வீரேந்திர சேவாக் அதிரடியாக ஆடி 319 ஓட்டங்களை குவித்து தென்னாபிரிக்காவை திணறவைத் தார். இந்நிலையில் இரண்டாவது கிரிக்கெற் டெஸ்ட் இன்று அகமதாபாத் மைதானத்தில் ஆரம்பமாகிறது. இந்த போட்டியை முன்னிட்டு தென்னாபிரிக்கா மற்றும் இந்திய வீரர்கள் வலைப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

இந்திய அணியின் முன்னணி வீரர்கள் காயத்தால் அவதிப்பட்டு வருகின்றனர். ஏற்கனவே சச்சின் டெண்டுல்கர் தசைப்பிடிப்பு காரணமாக அணியிலிருந்து விலகும் நிலை ஏற்பட்டுள்ளது.




முதல் டெஸ்ட் போட்டி மைதானம் ஆட்டக்காரர்களுக்கு சாதகமாக அமைந்த நிலையில் அகமதாபாத் மைதானம் எப்படி இருக்கும் என்னும் கேள்வி எழுந்துள்ளது. இந்த மைதானத்தின் தன்மையை இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போக்கை தீர்மானிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கை-மே. தீவுகள் 2ஆவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

இலங்கை-மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட்போட்டி இன்று ரிடினிடாட்டில் ஆரம்பமாகிறது. மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற் கொண் டுள்ள இலங்கை அணி 2 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இத்தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்று 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் இன்று ஆரம்பமாகும். இரு அணிகளுக்கும் தீர்க்கமான தாகும். (5)

# அரையிறுதியில் செரினா , குஸ்நெட்சோவா

மியாமி ஓபன் டென்னிஸ் தொடரில் மகளிருக்கான போட்டியில் அறையிறுதியில் விளையாட அமெரிக்காவின் செரினா வில்லியம்சும் ரஷ்சியாவின் இஸ்வெற்லானா குஸ்நெற்சோவாவும் தகுதி பெற்றனர். அமெரிக்காவில் உள்ள புளோரிடாவில் மியாமி ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன.

நேற்று முன்தினம் மகளிருக்கான காலிறுதி போட்டிகள் நடைபெற்றன. இதில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் (8) தர வரிசை பட்டியலில் முதலிடத்தில் உள்ள பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனினை 6-2, 6-0 என்ற நேர் செட்கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைய செய்து அரையிறுதிக்கு முன்னே றினார். மற்றொரு போட்டியில் ரஷ்யாவின் ஸ்வெட் லானா குஸ்நெட்சோவா 4 வீனஸ்வில்லி யம்சை (7) 6-4, 6-4 என்ற நேர்செட்கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன் னேறினார். (5)

# சேவாக்கை சமாளிக்க தனி வியூகம்

# உடலை குறிவைத்து 'பவுன்சர்' பந்து வீசத் திட்டமிட்டுள்ளோம்

## என்கிறார் தென்னாபிரிக்க பயிற்சியாளர் ஆர்தர்

(அகமதாபாத்)

அதிவேக முச்சதம் விளாசி சாதனை படைத்த சேவாக்கை சமாளிக்க, தென்னாபிரிக்க வீரர்கள் தனி வியூகம் வகுத் துள்ளனர். இந்தியா வந்துள்ள தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. சென்னையில் நடந்த முதல் டெஸ்ட் சமனிலையில் முடிபடைந்தது.

துடுப்பாட்டத்திற்கு சாதகமான ஆடுகளத்தில் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சேவாக் அதிரடியாக விளையாடி 319 ஓட்டங் குவித்து பல சாதனைகளை முறியடித்தார். தென்னாபிரிக்கா அணியிலும் மக்கன்சி, அம்லா ஆகியோர் அபாரமாக விளையாடினர்.

இந்தியா, தென்னாபிரிக்க அணிகளிடையேயான 2ஆவது டெஸ்ட் போட்டி, அகமதாபாத் சர்தார் பட்டேல் ஸ்டேடியத்தில் இன்று ஆரம்பமாகிறது. இரு அணி வீரர்களும் கடந்த இருதினங்களும் தீவிரமாகப் பயிற்சி செய்தனர். சேவாக்கின் அதிரடி ஆட்டத்தை சமாளிக்க தென்னாபிரிக்க வீரர்கள் தனி வியூகம் அமைத்துள்ளனர்.

இது குறித்து அந்த அணியின் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் கூறியதாவது,

சென்னை டெஸ்டில் சேவாக்கின் ஆட்டம் அற்புதமாக இருந்தது. அவரது ஆட்டத்தின் வீடியோ பதிவை பலமுறை போட்டுப் பார்த்தோம். அவர் 312 ஓட்டங்கள் குவித்த பிறகு தான். முதல் முறையாக புல்ஷொட் விளையாடினார். அவர் பந்தை அபாரமாக வெட்டி அடிக்கிறார்.

அகமதாபாத டெஸ்டில் அதிக 'பவுன்சர்' களை வீசி அவரை திணடிப்போம். விக்கெற்றுக்கு வெளியே போடாமல், அவரது உடலை குறிவைத்து நன்றாக எழும்பி வரும்படி பந்து வீச திட்டமிட்டுள்ளோம். இந்த வகை பந்து வீச்சை அவர் எப்படி சமாளிக்கிறார் என்று பார்க்கலாம்.



ஆடுகளம் வேகப்பந்துவீச்சுக்கு ஒத்துழைக்குமா என்பதை இப்போதே கணிப்பது கடினம். புற்கள் ஓரளவு இருந்தாலும், வெயில் அதிகமாக இருப்பதால் பந்து வேகமாக வராது.

தென்னாபிரிக்காவில் இதே வகையான பருவநிலையில் ஏற்கனவே விளையாடி உள்ளது எங்களுக்கு கைகொடுக்கும். எஸ்.ஜி வகை பந்துகளை உபயோகிப்பதால் எந்த பிரச்சனையும் இல்லை. இவ்வாறு மிக்கி ஆர்தர் கூறினார். (5)

# ஷூமாக்கர் 4 ஆவது இடம்

போர்முலா 1 கார் பந்தயத்தில் உலக சம்பியனாக ஆதிக்கம் செலுத்திய ஜேர்மனி வீரர் மைக்கல் ஷுமாக்கர் (39) முதல் முறையாக மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் கலந்து கொண்டு 4ஆவது இடத்தை பிடித்தார்.

போர்முலா 1 கார் பந்தயத்தில் 7 முறை உலக சம்பியன் பட்டமும் 91 கிராண்ட் பிரீ பந்தயங்களிலும் வென்றுள்ள ஷுமாக்கர் கடந்த ஆண்டு ஓய்வு பெற்றார்.

இந்நிலையில் இத்தாலியின் அட்ரியாடிக் கொஸ்டில் நடந்த கே.டி.எம். மைனர் சிரியஸ் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஷுமாக்கர் முதல் முறையாக கலந்து கொண்டார். இதில் ஷுமாக்கர் தகுதிச் சுற்றில் 3 ஆவது இடமும். பிரதான போட்டியில் 4ஆவது இடமும் பிடித்தார்.

பொழுது போக்காக மட்டுமே மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் கலந்துகொண்டேன். மோட்டார் ஜீ.பி. அல்லது சூப்பர் பைக் போட்டிகளில் கலந்துகொள்ளும் எண்ணம் இல்லை. சிறிய போட்டிகளில் மட்டுமே பங்கேற்பேன் என்றார் ஷுமாக்கர். (5)

# மோசமான பொருளாதார முகாமைத்துவமே இலங்கையின் பண வீக்க அதிகரிப்புக்கு காரணம்

## சர்வதேச நாணய நிதியம் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் பணவீக்கம் இரட்டை இலக்கம் அளவுக்கு அதிகரித்திருப்பதற்கு இலங்கையின் மோசமான பொருளாதார முகாமைத்துவமே காரணம் என்று கூறியிருக்கும் சர்வதே நாணய நிதியம், சர்வதே சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்தமை இதற்கு ஒரு காரணம் அல்ல என்று தெரிவித்திருக்கின்றது.

2008 பெப்ரவரி மாதத்தில் இலங்கையின் பணவீக்கம் 24.0 வீதமாக அதிகரித்தது. ஜனவரி மாதத்தில்இது 21. 6 வீதமாக இருந்ததுடன் 2007ஆம்ஆண்டுடன் ஒப்பிடும்போது 2008 பெப்ரவரியில் அது 7.1வீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது.

வடக்கு கிழக்கில் பெரும் நிதிச் செலவில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் ஒன்றை முன்னெடுத்துவரும் இலங்கை அரசாங்கம் சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்புமே பணவீக்கம் அதிகரித்தமைக்குக் காரணம் என்று கூறிவருகிறது. எனினும் 2006, 2007ஆம் ஆண்டுகளின் இலங்கையின் பணவீக்கத்தை ஆய்வு செய்த சர்வதேச நாணய நிதியம் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு போன்ற வெளித்தாக்கங்கள் பகுதியளவிலேயே இதில் செல்வாக்குச் செலுத்தியிருப்பதாகக் கூறியிருக்கிறது.

பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் பணவீக்கம் 2006ஆம் ஆண்டிலிருந்து சடுதியாக அதிகரித்து வருகின்றது என்று, 'இலங்கையின் பணவீக்கம்--வெளித்தாக்கங்களை கடந்து' என்ற தலைப்பில் 28 பக்கங்களில் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் பணவீக்கம் சடுதியாக அதிகரித்திருக்கின்றமையானது சர்வதேச சந்தையின் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு இதற்கு ஒரு காரணம் இல்லை என்பதை தெளிவாக்குகிறது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் இலங்கையின் பணவீக்கம் பெரும்பாலும் இலங்கைக்குள்ளேயே வளர்ந்த ஒன்று என்பதை ஆய்வு புலப்படுத்துகிறது என்று அந்த அறிக்கை வலியுறுத்தியுள்ளது.

தற்போதைய பணவீக்கத்தில் வெளித்தாக்கங்களின் பாதிப்பு சுமார் 25 சதவீதமாகவே இருக்கிறது என்று கூறும் அந்த அறிக்கை, மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு 6 வீதமும் இறக்குமதி விலையதிகரிப்பு 11வீதமும் நாணய மாற்றுவீதம் 10 வீதமும் இதில் செல்வாக்குச் செலுத்துவதாகக் குறிப்பிடுகிறது.

உள்நாட்டுத் தாக்கங்களே இலங்கையின் பணவீக்க அதிகரிப்பில் பெரும் பங்கு வகித்திருப்பதாகக் கூறும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை பணவீக்கத்தை குறைப்பதற்கு சிறந்த பொருளாதாரக் கொள்கைகள் அவசியமாகின்றது என்று தெரிவித்துள்ளது.

தாக்கம் உள்நாட்டுக்குள்ளேயே இருப்பதால் உள்நாட்டுப் பொருளாதாரக் கொள்கை மூலமே இதனை மாற்றியமைக்க முடியும் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

2004ஆம் ஆண்டில் ஏற்கனவே அளவுக்கு மீறிய ஆட் தொகையை கொண்டிருந்த பொதுத்துறைக்குள் மேலதிகமாக ஆட்களைச் சேர்த்துக் கொண்டமை, நட்டத்தில் இயங்கும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதை தடுத்து நிறுத்தியமை போன்ற அன்றைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் வரவு செலவுத்திட்டத்தில் செலவீனங்களை அதிகரித்து இலங்கையின் வரிக் கொள்கையை தலைகீழ் ஆக்கியது.

2004ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் கிட்டத்தட்ட பூச்சியமளவில் காணப்பட்ட இலங்கையின் பணவீக்கம் அதே ஆண்டில் இறுதிப் பகுதியில் மத்திய வங்கி கடன்கள் மூலமாக மசகு எண்ணெய்கான மானியம் வழங்கப்பட்டதன் காரணமாக 20 வீதமாக அதிகரித்திருந்தது என்று குறிப்பிட்டுள்ளது. (அ-5)

# யுத்தத்தினை திகதி குறிப்பிட்டு முடிவுக்கு கொண்டுவர முடியாது என்கிறார் பிரதமர்

(கொழும்பு)

பயங்கரவாத யுத்தத்தினை திகதி குறிப்பிட்டு முடிவுக்கு கொண்டுவர முடியாது என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார். ஹொரணையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

பயங்கரவாத யுத்தம் எப்போது முடிவடையும் என பலரும் எம்மிடம் வினவுகின்றனர். இந்த யுத்தத்தினை திகதி குறிப்பிட்டு முடிவுக்கு கொண்டு வரமுடியாது. விரைவில் யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவரலாம் என்று படையினர் கூறுகின்றனர்.

யுத்தத்தில் வெற்றி காண்பது நாம் அல்ல படையினரே யுத்தத்தில் வெற்றி பெறவேண்டும். நாடு துண்டுகளாக பிரிவதனை நாம் ஒரு போதும் அனுமதிக்கப்போவதில்லை என்றார் பிரதமர். (அ-5)

# தபால் திணைக்களம் நவீனமயப்படுத்தப்படும்

## அமைச்சர் மஹிந்த விஜேசேகர

(கொழும்பு)

21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ற விதத்தில் தபால் திணைக்களம் நவீன மயப்படுத்தப்படும். இதற்கான ஆலோசனைகளை பொதுமக்களிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் மஹிந்த விஜேசேகர தெரிவித்தார்.

மாத்தறை பிரதான தபால் அலுவலகத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

தபால் திணைக்களம் தற்போது நஷ்டத்திலேயே இயங்குகிறது. கடந்த ஆண்டில் மாத்திரம்.தபால் திணைக்களத்திற்கு 2ஆயிரத்து 800மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு தபால் திணைக்களத்திற்கு நஷ்டம் ஏற்பட இடமளிக்க முடியாது. தபால் திணைக்களத்தை நவீன மயப்படுத்துவதே இதற்கு காரணம் என நான் நினைக்கின்றேன். எனவே தபால் திணைக்களத்தை நவீனமயப்படுத்தி அதனை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றியமைப்பதே எனது நோக்கமாகும்.

தபால் திணைக்களத்தை தனியார் மயப்படுத்தும் நோக்கம் அரசாங்கத்திற்கு அறவே கிடையாது. இதற்கு நானும் உடன்படமாட்டேன் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-5)

# நிவாரணப் பணியாளர் படுகொலைக்கு பாதுகாப்புப் படையினரே காரணம்

## மனித உரிமைகள் அமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

2006ஆம் ஆண்டு 17 நிவாரணப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு பாதுகாப்பு படையினரே காரணம் என்று மனித உரிமைகள் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

17 நிவாரணப் பணியாளர்களை பொலிஸ் அதிகாரிகள் உட்பட அரச படையினர் கொலை செய்தமைக்கான சான்றுகள் தெளிவு படுத்துவதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் அதனை மூடி மறைத்திருப்பதாகவும் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் குழுவின் உறுப்பினர் ராஜன் கூல் தெரிவித்திருக்கின்றார்.

மோதல்கள் இடம் பெற்ற வேளையில் பொதுமக்கள் கொல்லப்பட்டமை யுத்த மீறல் எனவும் இந்தக் கொலைகளுக்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என்றும் கூல் மேலும் குறிப்பிட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படுகொலை இடம்பெற்ற சொற்ப வேளையில் மூதூர் பொலிஸ் நிலையத்தில் மகிழ்ச்சி ஆரவாரம் வெளிப்படுத்தப்பட்டதாக சாட்சியங்கள் கூறியிருப்பதாக மனித உரிமைகள் குழுவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டு 5 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவமும் மூடி மறைக்கப்பட்டிருப்பதாகவும் அதற்குப் பொறுப்பான அதிகாரி பதவி உயர்த்தப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 சாட்சியாளர்கள் ஏற்கனவே கொல்லப்பட்டு நான்காவது சாட்சியாளர் காணமற்போயிருப்பதோடு மற்றையவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ள சூழ்நிலையில் இந்த அறிக்கையை மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பு பாரிய ஆபத்துக்கு மத்தியில் தயாரிக்கப்பட்டதாக தெரிவிக்கின்றது.

புலனாய்வு நடவடிக்கைகளின் மகத்தான ஒரு செயலின் வெளிப்பாடே இந்த அறிக்கை என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. இந்தக் கொலைகள் தொடர்பான அரசாங்கத்தின் விசாரணைகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஒரு தீய கேலிச் செயலாக அமைந்திருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சிரேஷ்ட சட்ட ஆலோசகர் ஜேம்ஸ் றோஸ் தெரிவித்துள்ளார். (அ-7)

# விசேட வரிச் சலுகை நீக்கப்பட்டால் ஏற்றுமதியில் பின்னடைவு ஏற்படும்

## தேசிய ஏற்றுமதியாளர் சங்கம் தெரிவிப்பு

ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படும் விசேட வரிச்சலுகை இழக்கப்படுமாயின் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு பொருள்களை ஏற்றுமதி செய்வதில் பாரிய பின்னடைவு ஏற்படுமென இலங்கை தேசிய ஏற்றுமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட இலங்கை தேசிய ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் றொகான் லைமன் இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியம் இன்றி நாம் ஏற்றுமதியை நினைத்துப்பார்க்க முடியாது. உலகத்திலேயே பாரிய சந்தை வாய்ப்பைக் கொண்ட பணக்கார ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதியில் பாரிய தடை ஏற்பட்டுவிடும் என அவர் கூறியுள்ளார்.

இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதி அமைந்துள்ளது எனத் தெரிவித்துள்ள தேசிய ஏற்றுமதியாளர்சங்கத்தின் தலைவர், ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் விசேட வரிச் சலுகையை இலங்கை இழக்குமாயின் அது சந்தையில் பாரிய நட்டத்தை ஏற்படுத்தும் எனத் தெரிவித்தார்.

விசேட சலுகை வரிக்கமைய தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் வரிவிலக்குடன் பொருள்களை ஏற்றுமதி செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டார்.

விசேட சலுகை வரியின்றி நாட்டிலுள்ள அனைத்து ஆடை உற்பத்தித் தொழிற்பாடுகளும் செயலிழந்து விடுமென அங்கு உரையாற்றிய இணைந்த ஆடை உற்பத்தி நிறுவனங்களின் சங்கத் தலைவர் குமார நிர்சாந்தினி தெரிவித்தார். இது தொடர்பாக கருத்துரைத்த இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் வதிவி டப்பிரதிநிதி ஜூலியன் வில்சன், இலங்கைக் கும் எமக்குமான தொடர்பு மிக நீண்டகால மாக இருக்கின்றது. இலங்கையின் மூலம்நாம் சுமார் 2.8 பில்லியன் யூரோக்களை வருமா னமாக பெற்றுள்ளோம். ஆனால்,

இப்பொழுது இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்த அரசியல் மாற்றங்களால் ஒரு நிச்சயமற்ற சூழல் தோன்றியுள்ளது என்றார். (அ-5)

# இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு தபாலமைச்சர் அழைப்பு

(கொழும்பு)

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் ஒரு தீர்க்கமான கால அட்டவணையைத் தயாரிக்க முடியாது எனக் கூறிய தபால் தொலைத் தொடர்பு அமைச்சர் மஹிந்த விஜேசேகர சகல சமூகத்தினருக்குமான சம உரிமைகளை அடிப்படையாகக்கொண்டு தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் மாத்தறை மாவட்ட உதவித் தபாலதிபர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட வைபமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், நாட்டில் உள்ள சகல சமூக மக்களும் சமமான உரிமைகளை அனுபவிக்கக்கூடிய வகையில் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டுமெனக் கூறியுள்ளார்.

சிறுபான்மையினர் எமக்கு ஒரு பிரச்சினையல்ல. கிராமங்களில் ஒற்றுமையை ஏற்படுத்தி நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேண வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார். வறுமை, வேலையின்மை ஆகிய பிரச்சினைகளே இனப்பிரச்சினையைத் தூண்டியுள்ளது. ஆதலால் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது அவசியமாகும் எனவும் கூறியுள்ளார். (அ-5)

# மன்னாரில் நேற்று மின்னல் தாக்கி குடும்பஸ்தர் பலி

(மன்னார்)

மன்னார் ஆத்திமோட்டையில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதுக்குளம் ஆத்திமோட்டையைச் சேர்ந்த சுப்பிரமணியம் ராமு என்பவர் நேற்றுப் பிற்பகல் 3.45 மணியளவில் தேத்தாவாடிக்கும் இலுப்பைக் கடவைக்கும் இடையில் பயணம் செய்து கொண்டிருந்தபோது மின்னல் தாக்கியதில் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

(ச-5)

மனிதனுடைய உயர்வு, அவன் ஈட்டியிருக்கும் பொருள்களால் உண்டானதல்ல, அவனிடம் உள்ள அன்பினாலும், பண்பினாலும், ஈகையினாலும் அமைகின்றது. -தாகூர்

வலம்புரி

## மாணவர்களின் போசாக்குத் திட்டத்தை தெய்வீகப் பணியாக முன்னெடுக்க வேண்டும்

உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் போசாக்குத் திட்டம் யாழ். குடாநாட்டு மாணவர்களுக்கு கட்டாய தேவையாகும். யுத்த சூழ்நிலை-வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு-தொழில் இழப்புப் போன்ற பல்வேறு காரணங்களினால் நலிவுற்றிருக்கும் எமது மாணவர்களுக்கு பாடசாலைகளில் மதியவேளையில் வழங்கும் போசாக்கு உணவு ஆரோக்கியமான எதிர்கால சந்ததிக்கு அவசியமாகின்றது.

பாடசாலைகளில் மதிய உணவுத்திட்டத்தின் அறிமுகத்தால் கிராமிய பாடசாலைகளில் மாணவர்களின் வரவு வீதம் திருப்தியாக இருப்பதாகவும், மாணவர்களிடையே போசாக்கின்மையால் ஏற்படக்கூடிய மயக்கமுறல், களைப்பு, சோர்பு போன்ற குறைபாடுகள் கணிசமான அளவு குறைவடைந்துள்ளதாகவும் கணிப்பீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய மகிழ்ச்சிகரமான தகவல்களின் கிடைப்பனவு தனித்து போசாக்குத்திட்டத்தினால் மட்டும் ஏற்பட்டதல்ல. மாறாக உலக உணவுத்திட்டத்தினால் வழங்கப்படும் உணவு வகைகளுக்கு அப்பால் அவற்றின் போசாக்குத்தரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் காத்திரமான செயற்றிட்டங்களை வகுத்து அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றன. இது விடயத்தில் பொதுமக்களும், தமது பங்களிப்பை ஆற்றி வருகின்றனர்.

பெரும்பாலான பாடசாலை நிர்வாகங்கள்; மாணவர்களுக்கு வழங்கும் உணவை சுவையானதாகவும், மாணவர்கள் விரும்பி உண்ணக்கூடியதாகவும், நிறை போசாக்குடையதாகவும் வழங்குவதில் அப்பணிப்புடன் செயற்பட்டு வெற்றியும் கண்டுள்ளன.

இது தொடர்பில் அவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். அவர்களின் பொறுப்புணர்ந்த சேவை இறைவனால் ஆசீர்வதிக்கப்படக்கூடியதாகும்.

அதேநேரம் சில பாடசாலைகளில் மாணவர்களுக்கான மதிய உணவு உரிய முறையில் வழங்கப்படுவதில்லை. அவை துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன. மோசடி இடம்பெறுகின்றது என்ற திடுக்கிடும் தகவல்கள் நெஞ்சை வெடிக்கவைக்கும் போல் உள்ளது.

யுத்த சூழ்நிலையில் மகிழ்ச்சிகரமான வாழ்வு என்றால் என்ன என்பது பற்றி எதுவுமே தெரியாத சின்னஞ் சிறுசுகளின் உணவுப்பொருட்களிலேயே மோசடி இடம்பெறுகின்றதெனில் அதனை ஒருபோதும் மன்னிக்க முடியாது.

அத்தகைய குற்றங்கள் இடம்பெறுகின்ற போதிலும் அதனைப்பார்த்து கொண்டு நமக்கென்ன என்று பேசாதிருப்பது மிகப்பெரும் பாவச் செயலாகும். எனவே மாணவர்களின் மதிய உணவு வழங்கும் விடயத்தில் நேர்மைத் தன்மையான செயற்பாடுகள் 100வீதம் இடம்பெறுவதை உறுதி செய்வதை அனைவரும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அதேவேளை உலக உணவுத்திட்டத்தினால் வழங்கப்படும் சில வகையான உணவுப்பொருட்கள் தரமற்றவையாக- காலம் கடந்தவையாக இருப்பதான செய்திகளை அப்படியே ஒதுக்கிவிடுவது அவ்வளவு நல்லதல்ல.

குறிப்பாக் அமெரிக்காவினால் வழங்கப்பட்ட எண்ணெயின் பாவனைக்காலம் ஒரு சில மாதங்களாக இருக்கும் போது தரப்பட்டன. இதனால் அவற்றை ஏதோ ஒருவகையில் பயன்படுத்தி அதனால் கிடைக்கக்கூடிய, வரவு மாணவர்களின் உணவு வழங்கும் திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டதென்ற தகவல் சிறந்த முகாமைத்துவத்தின் செயற்பாடாகவே கருதப்பட வேண்டும். 10 நாட்களில் காலாவதியாகும் பல லீற்றர் எண்ணெயை மாணவர்களின் மதிய உணவுக்காக வழங்கப்பட்டதென அப்படி வைத்து அதனையே பயன்படுத்தினால் அது மாணவர்களின் போசாக்கு மேம்பாடு என்பதற்கப்பால் மாணவர்களை நோய்வாய்ப்படுத்துவதாகவே அமையும்.

எனவே இத்தகைய பகிர்வு நடவடிக்கை மேற்கொள்வதும் அதற்கான அனுமதியை உரிய அதிகாரிகள் வழங்குவதுமான நடைமுறைகள் தேவை.

இதன் மூலம் ஊழல் செய்தவர் குற்றச்சாட்டுக்கு ஆளாவதையும், ஊழல் செய்பவர் தப்பித்துக்கொள்வதையும் தடுக்க முடியும்.

# புனித மடுப்பிரதேசத்தில் மோதல்கள் இடம்பெறுவதைத் தவிர்க்க வேண்டும்

## மன்னார் ஆயர் அவசரக் கோரிக்கை

(கொழும்பு)

மடு தேவாலயத்துக்கு மிகவும் அண்மித்ததாக இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே புனித மடு தேவாலயத்துக்கு மதிப்பளிக்கும் வகையிலும் இப்பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்டும் முகமாகவும் இச் சூழலில் மோதல்கள் இடம்பெறுவதை படையினரும் புலிகளும் தவிர்க்க வேண்டும் என மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

மிகவும் புனிதமான இப்பிரதேசத்தில் மோதல்கள் ஏற்படாது தவிர்ப்பதை உறுதிசெய்யும் வகையில் கத்தோலிக்க மக்கள் புனித மடுமாதா மீது பக்தி கொண்டவர்கள். சர்வமதத் தலைவர்கள் மனிதாபிமானிகள் மற்றும் சர்வதேச சமூகம் ஆகியோர் எம்முடன் ஒன்றிணைந்து மடு அன்னையைப் பாதுகாக்க முன்வர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் ஆயர் இராயப்பு ஜோசப் அடிகளார் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் பரந்து வாழும் கத்தோலிக்க மக்கள் மத்தியில் மடுமாதா ஆலயம் மிகவும் பிரசித்தம் பெற்றதாகும். இது 400வருடங்களுக்கு மேலாக பழமை வாய்ந்தது பல்வேறு இன மத மக்களும் வந்து வழிபடும் புனித தலமாக மடு தோவாலயம் விளங்குகின்றது.

இப்பிரதேசம் வழிபாட்டு தலமாகவும் அகதிகளுக்கான பாதுகாப்பு பிரதேசமாகவும் மடுமாதா ஆலய நிர்வாகத்தினரால் மிகவும் புனிதமாகப் பேணப் பட்டு வரு கின்றன.

இப்பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகளுக்கோ அரசியல் செயற்பாடுகளுக்கோ எந்த விதமான இடமும் வழங்காது மிகவும் உறுதியாக பின்பற்றப்பட்டு வருகின்றன. இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடந்த சில வாரங்களாக இந்த வழி பாட்டுத் தலத்தின் நடவடிக்கைளும் மனிதாபிமானப்பணிகளும் மிகுந்த அச்சுறுத்தலுக்குள்ளாகியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. ஆலயச் சுற்றாடலில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஷெல்கள் வந்து விழுகின்றன. இங்கு வசிக்கும் வசித்து வந்த பலரும் இச் சூழலை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இன்றைய சூழ் நிலையில் இராணுவ நடவடிக்கைகள் ஆலயத்துக்கு மிகவும் அண்மித்ததாக மேற்கொள்ளப் படுகின்றன. இந்நிலையில் மடுதேவாலயத்தையும் அமைதி வலயத்தையும் மோதலில் ஈடுபடும் இருதரப்பினரும் கௌரவிக்க வேண்டுமென நாம் அவசர வேண்டுகோள் விடுகின்றோம்.

அத்துடன் இப்பிரதேசம் முற்று முழுதாக தேவாலய நிர்வாகத்தின் கீழ் இருப்பதை உறுதி செய்யவேண்டும் என்றும் கோருகின்றோம். இந்த இக்கட்டான கட்டத்தில் மடு அன்னையைப் பாதுகாக்க சகல தரப்பினரும் கைகொடுக்கவேண்டும் என்று நாம் கோருகின்றோம். (அ-5)

# நியாயமான தீர்வை முன்வைக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்

## 3 தமிழ்க்கட்சிகள் கோரிக்கை

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் நியாயமான தீர்வை முன் வைப்பதற்கான அழுத்தங்களை இலங்கை அரசாங்கம் மற்றும் பிரதான எதிர்க்கட்சி என்பனவற்றுக்கு பிரித்தானியா வழங்க வேண்டும் என்று மூன்று தமிழ் கட்சித் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கை வந்துள்ள பிரித்தானியாவின் பாராளுமன்ற உறுப்பினர்களை கடந்த திங்கட்கிழமை மாலை சந்தித்து பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி. ஆனந்தசங்கரி, புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ்.பத்மநாபா அணியின் செயல்ளாளர் எஸ்.ஸ்ரீதரன் ஆகியோரே இக்கோரிக்கையினை விடுத்துள்ளனர்.

கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நடை பெற்ற இச்சந்திப்பில் பிரித்தானிய எம்.பிக்க ளிடம் கருத்து தெரிவித்த மூன்று கட்சிகளின் தலைவர்களும் இலங்கையின் தற் போதைய நிலை குறித்து எடுத்துக்கூறியுள்ளனர். வட கிழக்கு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாணப் படவேண்டியது அவசியமாகும். நிரந்தர தீர்வினை முன் வைக்குமாறு அரசாங்கத்தையும் எதிர்கட்சியினரையும் பிரித்தானியர் வலி யுறுத்தவேண்டும். இதற்கான பங்களிப்பை பிரித்தானியா முழுமையாக வழங்க வேண்டும். சர்வதேசம் ஏற்கும் வகையில் அதிகாரத்தை பகிரும் நிரந்தர தீர்வினை அரசாங்கம் முன் வைத்தால் அதனை ஏற்றுக் கொள்ள நாம் தயாராக இருக்கின்றோம். எனவே நிரந்தர தீர்வை முன்வைப்பதற்கான அழுத்தங் களை வழங்கவேண்டும் என்று மூன்று கட்சிகளின் தலைவர்களும் இச் சந்திப்பில் வலியுறுத்தியுள்ளனர். (அ-5)

# மனித உரிமைகள் தொடர்பாக ஊடகங்களின் ஆளுமையைக் கட்டியெழுப்ப அவு. நிதி உதவி

(கொழும்பு)

மனித உரிமைகளின் மேம்பாட்டுக்கும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கும் இலங்கைக்கு உதவிகளை வழங்க தயாராகவுள்ளோம். மனித உரிமைகள் தொடர்பாக இலங்கையுடன் பல்வேறு மட்டங்களில் கலந்துரையாடல் நடத்தப் பட்டுவருகின்றது என்று இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர்கத்தே கிளங்மன் தெரிவித்தார்.

மனித உரிமைகள் தொடர்பாக ஊடகங்களின் ஆளுமையை கட்டியெழுப்பும் செயற்றிட்டத்துக்காக அவுஸ்திரேலிய அரசாங்கம் கொழும்பு பல்கலைக் கழகத்தின் மனித உரிமைகள் கற்கை நிலையத்துக்கு 6 மில்லியன் ரூபாய் நிதியுதவியை வழங்கியுள்ளது.

இதற்கான காசோலையை உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் கத்தே கிளங்மன் மனித உரிமைகளின் கற்கை நிலையத் தலைவர் கலாநிதி ரவீந்திர பெர்னாண்டோவிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் கத்தே கிளங்மன் மேலும் கூறியதாவது,


அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நீண்ட காலமாக நட்புறவு நிலவி வருகின்றது. அவுஸ்தி ரேலியா இலங்கையின் பல்வேறு அபி விருத்தித் திட்டங்களுக்கும் மனிதநேய நடவடிக்கைகளுக்கும் உதவியளித்துவருகின்றது.

இந்நட்புறவின் அடிப்படையில் அரசாங்க மட்டத்திலும் மனித உரிமை ஆணைக் குழுக்களின் மட்டத்திலும் இரு நாடுகளுக்கு இடையிலும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவை ஆரோக்கியமான முறையிலும் பயனுள்ள வகையிலும் நடைபெறுகின்றன.

இதேவேளை இலங்கையின் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு தேவையான உதவிகளை வழங்க அவுஸ்திரேலியா தயாராகவுள்ளது. இதன் ஒரு பகுதியாகவே மனித உரிமைகள் தொடர்பில் ஊடகவியலாளர்களின் ஆளுமையை கட்டியெழுப்பும் செயற்றிட்டத்துக்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனித உரிமை கற்கை நிலையத்திற்கு 6 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கப்படுகின்றது.

மனித உரிமைகள் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல், பயிற்சிகளை வழங்குதல், வளங்கள், ஆலோசனைகளை வழங்குதல் என்பன இச்செயற்றிட்டத்தின் கீழ் வழங்கப் படவுள்ளது. மனிதாபிமான நடவடிக்கைகள் தொடர்பிலும் இலங்கைக்கு அவுஸ்திரேலியா தொடர்ந்தும் உதவிகளை வழங்கும். (அ-5)

# உயர்ந்த தெய்வீகம் பகவான் பாபா



ஐதராபாத்தில் கலாநிதி பாலகிருஷ்ணா தலைமையில் விஞ்ஞானிகளின் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. இதில் ஜப்பானைச் சேர்ந்த விஞ்ஞானி ஒருவரும் வந்திருந்தார். கலாநிதி பாலகிருஷ்ணா அவரைத் தனது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். கலாநிதி பாலகிருஷ்ணா பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் தெய்வீகத்தைப் பற்றியும் பகவான் கடவுளின அவதாரம் என் பது பற்றியும் எடுத்துக் கூறினார்.

இவர் கள் இருவரும் அவரது தரிசனத்துக்காக பகவானிடம் சென்றனர். சுவாமி இருவரையும் அன்பாக அழைத்தார். சுவாமி அவ் ஜப்பானிய விஞ்ஞானியைப் பார்த்து புன்முறுவல் செய்தார். பின்பு தன் கைகளையசைத்து அதில் மனித இதயம் ஒன்றை உருவாக்கி அவருக்கு காட்டினார். விஞ்ஞானிக்கு ஒன்றும் புரியவில்லை ஆச்சரியப்பட்டார். சுவாமியும் அவரிடம் இது என்ன என்று கேட்டார். விஞ்ஞானி இது இதயமென்று குறிப்பிட்டார். உனக்குத் தெரியுமா இது யாருடையது என்று பகவான் கேட்க அதற்கு அவ் விஞ்ஞானி எனக்கு எப்படித் தெரியும் என்று விழிக்க. இது உன்னுடைய இதயம் தான் நீர் பிறக்கும் போது இருந்த இதயம்.

விஞ்ஞானி அதிர்ந்து போனார். சுவாமி விளக்கி கூறினார். இது உன் இதயம்தான் நீ பிறந்தவுடன் உனது இதயம் தொழிற்படாது நின்று விட்டது. அனைவரும் நீ இறந்து விட்டதாக கருதினர். உனது உடல் நீலமாக மாறிவிட்டது. உனது தந்தை இறைவன் மீது நம்பிக்கையும் பக்தியும் உடையவர். அவர் உன்னை எனது காலடியில் வைத்து பிரார்த்தனை செய்தார். கடவுளே நானொரு குழந்தைக்காக உன்னிடம் மிகவும் வருந்தி வேண்டினேன். இது தான் என் பிரார்த்தனைக்கு கிடைத்த பலனோ என்று மனமுருகி கவலையுற்றார். நான் உடனே உன் இதயத்தை சரிசெய்து உன் வாழ்க்கையை மீட்டுக்கொடுத்தேன். ஜப்பானிய விஞ்ஞானியின் வயதோ பகவானுடைய வயதைவிட அதிகம். அவரது தந்தை புத்த பெருமானிடம் தான் பிரார்த்தனை செய்தார். அப்போதுதான் விஞ்ஞானிக்கு நினைவு வந்தது தனது தாய் தந்தையர் கூறியது. இவ்விடயம் பெற்றோரை தவிர வேறொருவருக்கும் தெரியாது. ஆக்வே அவ்விஞ்ஞானி பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த பகவான் புத்தரே ஸ்ரீ சாயியாக மீண்டும் அவதாரம் செய்திருக்கிறார் என்ற தீர்மானமான முடிவிற்கு வந்தார்.

'இந்த என்னுடைய மனித அவதாரம் எல்லாத் தர்மங்களையும் தெய்வீக சக்திகள் எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டது. இதனை ஒரு போதும் சந்தேகப்படாதே. உங்களுடைய இதய சிம்மாசனத்தில் எனது தெய்வீக வடிவத்தை அசைக்க முடியாத நம்பிக்கையுடன் பிரதிஷ்டை செய்து கொள்ளுங்கள். மனிதன் எந்தக் கடவுள் வடிவத்தை வணங்குகிறானோ எக்குணங்களை மேலாக போற்றுகிறானோ அவையெல்லாம் 'சாயி' என்கிற வடிவத்தில் மட்டுமே அடங்கியிருக்கிறது என்பதை நிரூபிப்பேன்'.

ஜெய்சாயிராம் - யாதவன் -




மன்னாரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டவர்களைப் படத்தில் காணலாம்.

## தொல்.திருமாவளவன் தொடர்ந்த வழக்கில் சிங்களத் திரைப்படத்திற்கு இடைக்காலத் தடை

தமிழர்களை அவமதிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள சிங்களத் திரைப்படத்துக்குத் தமிழ்நாடு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

'பிரபாகரன்' என்ற பெயரில் தயாரிக்கப்பட்டுத் தமிழ்நாட்டின் சென்னையில் பிரதி எடுப்பதற்கான பணிகளை மேற்கொண்டிருந்த சிங்களத் திரைப்படத்தை முடக்க வேண்டும் என்றும் அப் படத்தின் பிரதிகளை இந்திய அரசு அழிக்க வேண்டும் என்றும் வலியுறுத்திச் சென்னை மாநகர முதலாவது உதவி உரிமையியல் நீதிமன்றில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் நேற்று முன்தினம் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணை நேற்று நீதிபதி சேதுமாதவன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தொல்.திருமாவளவனின் சட்டத் தரணிகளான இளமாறன், ஆர்வலன் ஆகியோர் சார்பில் மூத்த சட்டவாளர் ஏ.ஆர்.எல்.சுரேஸ் நீதிமன்றில் முன்னிலையாகி தெரிவித்ததாவது,

இந்தத் திரைப்படம் மொத்தத் தமிழினத்தையே இழிவுபடுத்தக் கூடியது. அதேபோல் இப் படத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் போனவர்களை 'வயலெண்ட் மோப்ஸ்' என்று சிங்களத் திரைப்பட இயக்குநர் தெரிவித்திருக்கின்றார் என்றார். (ச-5)

## வில்பத்துப்...

பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

65 வயதுடைய தந்தை ஒருவரும் 16 வயதுடைய மகன் ஒருவருமே இச் சம்பவத்தில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சுட்டுக் கொல்லப்பட்டவரின் மனைவி வழங்கிய தகவலையடுத்தே சம்பவம் குறித்து அப்பகுதிப் பொலிஸாருக்குத் தெரியவந்ததாகக் கூறப்படுகின்றது.

தாங்கள் விறகு வெட்டச் சென்றதாகவும் அங்கே வந்த அடையாளம் தெரியாத ஆயுதாரிகள் சிலர் கணவனையும் மகனையும் சுட்டுக் கொன்றுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றதாகவும் சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## அகில...

புவநாதன் நிரூஜன், நரேந்திரன், திருக்கணிதன் ஆகிய இரு மாணவர்களுமே இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர். இதேவேளை வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளான ருக்ஷிகா, சுமங்கலி ஆகியோர் முறையே 4,5 ஆம் இடங்களையும் தாரணி 8 ஆம் இடத்தையும் அகில இலங்கை ரீதியில் பெற்றுள்ளனர். (ச-5)

## மன்னார்...

பதாகவும் இராணுவம் தெரிவித்துள்ளது.

எனினும் இராணுவத்தினரின் முன்னேற்ற நடவடிக்கையை முறியடித்துத் தாக்குதல் நடத்தியிருப்பதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ச-5)

## அரசாங்கத்தை நம்பிப் பலனே...

கூறியதாவது,

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து யானைச் சின்னத்தில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வந்திருக்கின்றது. திருகோணமலையில் நானும் மட்டக்களப்பில் பசீர் சேகுதாவூத்தும் அம்பாறையில் ஹசன் அலியும் போட்டியிடுவது என்று முடிபு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டாலும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸே தேர்தல் பிரசார நடவடிக்கை களை முதன்மையாக முன்னெடுக்கவுள்ளது.

இந்த அரசாங்கத்தை நம்பி பலன்ஏதும் ஏற்படப் போவதில்லை. எமது கட்சியிலிருந்த சிலர் எம்மை விட்டுச் சென்றிருந்தாலும் அதனால் எங்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது. குறுகிய அரசியல் இலாபங்களுக்காக அரசுடன் இணைந்துள்ளவர்களைத் தோற்கடிக்கவே நாம் இன்று தயாராகியுள்ளோம்.

அரசாங்கம் கிழக்கிலுள்ள தமிழ்மக்களின் வாக்குகளைத் தமக்குச் சார்பானவர்களைப் பயன்படுத்திக் கொள்ளையடிக்கத் திட்டமிட்டிருக்கின்றது. இதற்கு நாங்கள் ஒருபோதும் இடம்கொடுக்க மாட்டோம். அரசின் கனவை சிதறடிப்போம். அதற்காகவே எமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் துறந்திருக்கின்றோம் என்றார். (ச-5)

## பாகிஸ்தானிடமிருந்து இலங்கை...

பெருந்தொகையான கைக் குண்டுகளும் உடனடி விநியோகத்திற்காக வேண்டுகோள் விடுத்துள்ளதாக அவ்வட்டாரம் மேலும் தெரிவிக்கின்றது.

25 மில்லியன் டொலர் பெறுமதியான 81 மி.மீ., 120 மி.மீ.,130 மி.மீ. மோட்டார் உபகரணங்களை ஒரு மாத காலத்திற்குள் வழங்குமாறு இலங்கை கேட்டுள்ளதாக அந்த வட்டாரம் ஐ.ஏ.என்.எஸுகுத் தெரிவித்துள்ளது.

இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா கடந்த வருடம் 6 நாள் விஜயம் ஒன்றை இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்த சமயம் இத் தேவைகள் குறித்து பாகிஸ்தான் தளபதி ஜெனரல் அஷ்ரப் பேர்லேஸ் கானுக்கு வேண்டுகோள் விடுத்ததாகத் தெரிகின்றது.

அவசர நடவடிக்கையாகப் பாகிஸ்தான் ஆயுதங்களை வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. வடக்கு புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை விடுவிக்கும் முகமாக ஆயுத உதவிகளுக்கான இந்த அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (து)

## சட்டி, பானைகளுடன் வீதியில்...

முடியாத நிலை மக்களுக்கு ஏற்பட்டிருப்பதாக நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க இதனைக் கூறியுள்ளார்.

வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கு மார்ச் 31 ஆம் திகதி வரை அரசாங்கத்துக்குக் காலக்கெடு வழங்கியிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

சித்திரை வருடப்பிறப்புக்கு முன்னர் பொருள்களின் விலைகள் குறைக் கப்படும் என அரசாங்கம் கூறியிருந்த போதும் அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் அரசாங்கத்துக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இன்று முதல் நாடளாவிய ரீதியில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டினார். இன்று கிராண்ட்பாஸில் நடைபெறவிருக்கும் அரசுக்கு எதிரான போர்ராட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் சட்டிகள், பானைகளுடன் கலந்து கொண்டு அவற்றை வீதியில் போட்டுடைப்பார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் குறிப்பிட்டார்.

புதுவருடத்திற்கு முன்னர் விலைகள் குறைக்கப்படும் என அரசாங்கம் கூறியிருந்த போதும் புதுவருடத்தில் மக்கள் உண்ண முடியாத நிலையொன்றே ஏற்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு முதல் பொருள்களின் விலைகள் சடுதியாக அதிகரித்து வருகின்றன.

உலக சந்தையில் எண்ணெயின் விலைகள் மற்றும் பொருள்களின் விலைகள் அதிகரித்தமை மற்றும் யுத்தமே இலங்கையிலும் பொருள்களின் விலை அதிகரிப்புக்குக் காரணம் என அரசாங்கம் கூறுகின்றபோது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மோசடிகளே விலை அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறினார். (ச-2,5)

## மடுவை சமாதான வலயமாக்கக்...

பேரணி தொடங்கிப் பிரதான வீதியூடாக நகர்ந்தது.

மன்னார் நுழைவாயிலிலுள்ள தேவாலயத்தில் சிறப்புப் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டு மீண்டும் பேரணி அரச அதிபர் செயலகம் நோக்கிச் சென்றது. அரச அதிபர் செயலகத்தைப் பேரணி சென்றடைந்ததும் அங்கு சமாதானத்தை வலியுறுத்தி பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

மன்னார் மடுமாதா திருத்தலத்தைப் போரற்ற பிரதேசமாக, சமாதான வலயமாக மாற்ற வேண்டும் என்றும் விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் அப்பகுதியில் உடனடியாகச் சண்டையை நிறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அந்தக் கோரிக்கைகளை உள்ளடக்கிய, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கான மனு மன்னார் அரச அதிபர் நிக்கிலஸ்பிள்ளையிடம் கையளிக்கப்பட்டது.

மனுவை மன்னார் மறைமாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப் கையளித்தார்.

கையளிக்கப்பட்ட மனுவில் மடுப் பிரதேசத்தை அமைதி வலயமாக சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்து மாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வழிபாடு மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையிலேயே இக்கோரிக்கை விடப்பட்டுள்ளது. இன்றைய சூழ்நிலையில் இராணுவ நடவடிக்கைகள் ஆலயத்திற்கு மிகவும் அண்மித்ததாக மேற்கொள்ளப்படுகின்றது.

இந் நிலையில் மடுத் தேவாலயத்தையும் அமைதி வலயத்தையும் மோதலில் ஈடுபடும் இருதரப்பினரும் கௌரவிக்க வேண்டும் என நாம் அவசர வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அத்துடன் இப் பிரதேசம் முற்றுமுழுதாக தேவாலய நிர்வாகத்தின் கீழ் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் எனக் கோருகின்றோம். இந்த இக்கட்டான கட்டத்தில் மடு அன்னையைப் பாதுகாக்க சகல தரப்பினரும் கைகொடுக்க வேண்டும் என்று நாம் கோருகின்றோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-2,5)

## ஹக்கீம் உட்பட 3 எம்.பிக்கள்...

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காகவே தமது நாடாளுமன்றப் பதவிகளிலிருந்து விலகுவதாகத் தெரிவித்துள்ள இவர்கள் மூவரும் உடனடியாகவே தேர்தல் களத்தில் குதிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலை மாவட்டத்தில் ரவூவ் ஹக்கீமும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பசீர் சேகுதாவூத்தும் அம்பாறை மாவட்டத்தில் ஹசன் அலியும் போட்டியிடுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இவர்களில் யார் முதலமைச்சர் வேட்பாளர் என்பது குறித்து தகவல் உடனடியாக வெளிவரவில்லை. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீட உறுப்பினரான ஹிஸ்புல்லா ஆளும் தரப்புக்குத் தாவியதையடுத்தும் கிழக்கு மக்களின் நன்மை கருதியுமே தாங்கள் இந்த முடிவை எடுத்ததாக ஹசன் அலி தெரிவித்தார்.

மூவரில் ரவூவ் ஹக்கீம் தவிர ஏனைய இருவரும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முக்கிய தலைவர்கள் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் களத்தில் குதிப்பது ஆளுந்தரப்புக்கும் அங்குள்ள துணை இராணுவக் குழுவுக்கும் பெரும் நெருக்கடியைக் கொடுக்கும் என்று கூறப்படுகின்றது.

அதேநேரம் ரவூவ் ஹக்கீம், பசீர் சேகு தாவூத். ஹசன் அலி ஆகியோர் பதவி விலகியிருந்தாலும் அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து யானைச் சின்னத்திலேயே போட்டியிடுவார்கள் என்று தெரிகின்றது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூவ் ஹக்கீமே முதலமைச்சர் வேட்பாளர் என்றும் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இணங்கியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. ரவூவ் ஹக்கீமின் நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்துக்கு நௌசாட் நியமிக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாண சபைக்கான வேட்புமனுத் தாக்கல் இன்றுடன் முடிபடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

**5 ஆம் தர புலமைப் பரீட்சைக்குத் தோற்றும் அன்பு மாணவர்களே!**

5 ஆம் தர புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்களை பத்திரிகை மூலமாக முதன்முதலில் யாழ்.குடாநாட்டில் அறிமுகப்படுத்திய உங்கள் அபிமானத்துக்குரிய

**வலம்புரியில்**

மிக விரைவில் எதிர்பாருங்கள்.

புலமைப் பரீட்சை **மாதிரி வினாத்தாள்**

குறிப்பு:- முன்னோடிக் கருத்தரங்குகள் பற்றிய விபரம் விரைவில் அறியத்தரப்படும்.

**துரித தபால்கள் பொதிகள் சேவை**

மலரும் புத்தாண்டை முன்னிட்டு
மீண்டும் எமது வாடிக்கையாளர்களுக்கு 10% - 20%
வரை யான பொதிகளுக்கு விசேட விலைக் கழிவு

FedEx Express

லண்டனுக்கு அனுப்பப்படும்
5 Kg பொதிகளுக்கு மிகக்குறைந்த
கட்டணத்தில் விசேட சலுகை
1-Kg-900/=

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும்
சில மணிநேரங்களில் மிக விரைவாகப்
பணத்தைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

( உங்களுக்காக ஞாயிறு விடுமுறை நாட்களிலும்!)

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. 021 222 7310 (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தல் 03.04.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.